MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905வரு ஜனவரிமீ { புத்தகம் 1

நமது பத்திரிகை.

இவ்வுலகின்கண் வாழும் மாந்தர் ஒருவரையொருவர் அன்புடன் தழுவி நேசியாமல் தங்கள் தங்கள் சுயநயத்தையே கருதி வெறுப்பு, பகை, சண்டை முதலானவற்றை வித்தாக விதைத்துத் துன்பத்தைப் பலனாக அனுபவிக்கிறார்கள். "எல்லாருடைய நன்மையிலேயே தனது நன்மையுமிருக்கின்றது" என்ற முதுமொழியை அவர் மனத்தில் பதியாக்குறையே இதற்கு விதியாய் நிற்பதெனக் கூறலாம். இதைப்பற்றியொரு சரிதமுண்டு. தசரதச் சக்கிரவர்த்தியாரின் மனைவியான கோசலைப்பிராட்டியானவள் புத்திரோற்பத்தி காலத்தில் இவ்வுலகமெல்லாவற்றையும் ரக்ஷிக்கப்பட்ட புத்திரன் பிறக்கவேண்டுமென்று சிந்தித்தாளாம். சாதாரணமான பெண்கள் தம்மையும் தம்மைச்சார்ந்தவர்களையும் ஆதரிக்கும்படியான புத்திரன் வேணடுமென்றே கருதுவது வழக்கம். அப்படியன்றிக் கோசாலாதேவி உலகரக்ஷகனான புத்திரனை வேண்டிய காரணமென்னவென்றால் இவ்வுலகத்துள்ளே தானும் தன்னைச்சார்ந்தோரும் அடங்கியிருக்கிறார்கள் என்றுதான் அல்லவா? இதனால் எல்லாரும் வாழவேண்டுமென்ற எண்ணத்துள்ளே தன்னுடைய வாழ்வும் அடங்கியிருக்கின்றது.

தமக்குச்சிறிதும் நன்மை சித்திக்காவிடின் பிறர்க்குத்தீமை சம்பவிப்பதைக்கண்டு களிப்பார் சிலர். பிறரைப்பார்க்கிலும் தாம் அதிக நன்மையடைய விரும்புவார் சிலர். பிறர் நன்மை தீமையைக் கவனியாது தமது நன்மையைமாத்திரம் கருதுபவர் அவரினும் சிலர். இவர்கள் ஒருவருக்கொருவர் தாரதம்மிய முடையராயினும் இவர்க்கெல்லாம் முன்னிற்பது தன்னய விருப்பமொன்றேயாம். கடவுளின் நியமத்தால் ஆளப்படும் இவ்வுலகில் ஒருவன் பொது நன்மையைக்கருதாது தான்மட்டும் நன்மையடைய விரும்புதலானது இந்துலாவினால் ஆளப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்த சகோதரன் ஒருவன் தனது மற்றைச் சகோதரர்கட்குப் பயன்படாது தனக்கே யுரியதாகும்படி பொருள் தேடிவைக்க முயல்வதுபோலாமன்றோ? இவ்வுலகமே ஒரு வீடாகவும் மாதாபிதாக்கள் கடவுளாகவும் நாம் எல்லாரும் சகோதரர்களாகவும் இருக்கின்றோம். இங்ஙனம் ஏககுடும்பஸ்தரான நம்முள்ளே ஒருவரால் உண்டாகும் நன்மையில் மற்றவர்க்கும் சமபாகம் இருக்கவேயிருக்கிறது. அவரவர் பாகத்தை அவரவர் அடைந்தே வருகிறார்கள் எவனுடைய முயற்சியால் வருகிற பயனை மற்றவர்களும் அனுபவிக்கிறார்களோ அவன் சுயநயம் பாராட்டுபவனானால் அதற்காக வருத்தமடைகிறான். அதனாலேயே அப்படிப்பட்டவர்கட்குத் துன்பமே கதியாகின்றது.

வயிற்றுக்கும் ஏனைய அவயவங்கட்கும் ஒருகாலத்தில் பகையுண்டாகியதனால் சரீரத்தைவிட்டு ஆவி பிரிய நேர்ந்தது என்று சிறுவர்கட்கு ஒரு கதை போதிப்பதுண்டு. அக்கதைக்கு உதாரணமாகின்றனர் மேற்கூறியவர்களே. ஆதலின் யாவரும் சுகமடையும்பொருட்டுக் கடவுளிடத்துப் பிதுர்ப்பாவனையும், ஒருவர்க்கொருவர் சகோதர பாவனையும் வேண்டுதல் அவசியமாகும். "கடவுள்பால் பிதுர்ப்பாவனை எதற்கு? நம்முள் சகோதர பாவனை மட்டும் போதாதா?" என்னின், போதியதன்று. நமக்குள் சகோதரபாவனை சித்திப்பதற்கு ஏது கடவுள் பிதுர்ப்பாவனையே யாதலின் அது முக்கியமானதொன்றென்க.

இராசாங்கத்தார் எத்தனை சட்டங்களை ஏற்படுத்தினும், எத்தனை சீர்திருத்தங்களைச் செய்யினும் ஜனங்கள் மேற்கூறிய உண்மையைக் கைக்கொண்டு நடந்தால் அன்றி யாருக்கும் சுகப் பிராப்தி யுண்டாகாதென்னலாம். இவ்வுண்மையோ சமயத் துட்பட்டதாகும். சமயமெனினும் கடவுளிடத்து விசுவசித்து நடாத்தும் மார்க்கமெனினும் ஒக்கும். ஆதலின் சமயஞானமே ஜனங்கட்கு வேண்டுவது ஆவசியகம்.

இத்தகைய மேலான ஞானத்தையே முதன்மையாக விளக்கிவருகின்ற நமது பத்திரிகை 3 வருஷங்களாகத் தமிழ்நாடு முழுதும், மற்ற நாடுகளிற் சிற்சில பாகத்தும் உலாவிவந்து 3 ௵ பூர்த்தியடைந்து 4 வது ௵ வளர்ச்சியையும் அடைந்திருப்பது யாவருமறிந்ததே.

இது முதல்வருஷத்தில் 28 பக்கமாகவும், இரண்டாம் வருஷத்தில் 36 பக்கமாகவும், மூன்றும் வருஷத்தில் 44 பக்கமாகவும் நடைபெற்றது. இந்த நான்காம் வருஷத்தில் 52 பக்கமாகி சென்ற வருஷத்தினும் 8 பக்கம் அதிகப்பட்டு வருகின்றது. பத்திரிகையின் அளவு அதிகப்படுகின்றதாகவும் சந்தாத்தொகை யளவு அதிகப்படாமல் முன்போல் இரண்டு ரூபா ஆகவே இருக்கின்றது. இவ்வாறு வருஷத்துக்கு வருஷம் வளர்ச்சியுற்று வருகிற பத்திரிகை நமது விவேகபாநு ஒன்று மட்டுமே யென்று திட்டமாகக் கூறலாம். இப்போதுள்ள அல்லது முன்னிருந்த தமிழ்ப் புத்தகப் பத்திரிகைகளில் எந்தப் பத்திரிகையாவது இவ்வாறு வருஷம் தோறும் வளர்ச்சியுற்று வந்ததுண்டா? இல்லை. 52 பக்கங்கொண்டு இரண்டு ரூபா சந்தாவுக்குக் கிடைக்கும் பத்திரிகை இதைத் தவிர வேறுண்டா? இல்லை. இல்லை. நன்கு கவனித்தால் இப்பத்திரிகையானது பொருள் லாபம்பெறக் கருதி நடத்தப்படாமல் பொது நன்மையைக் கருதியே நடத்தப் பெறுகின்றதென்பது தெளிவாக விளங்கலாம்.

இப்பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களில் பல சுதேசமித்திரன், பிரபஞ்சமித்திரன், நீலலோசனி, திராவிடவர்த்த

மாணி, சத்தியநேசன், தக்ஷிண தீபம், மாதர்மனோரஞ்சனி முதலிய மற்றைப் பத்திரிகைகளால் எடுத்தாளப்பட்டிருப்பதனாலேயே. உலகிற்குப் பெரிதும் நன்மை செய்வனவும், அறிவு விர்த்திக்கு ஏற்றவும், சமய வுணர்ச்சியை விளைவிப்பனவுமாயிருத்தல் யாரேயறியார்?

தமிழ்நாட்டு வாசிகள் எல்லாரும் வாசித்து அறிவுபெற வேண்டியே தெளிவான சுலப நடையில் எல்லா விஷயங்களும் எழுதப்பெறுகின்றன. சில தமிழ்ப்பண்டிதர்கள் தங்கள் சாமர்த்திய முழுதுங் காட்டிவிட வேண்டுமென்று கருதி திரிசொற்களையே பெரிதும் சேர்த்து வாசிப்பவர்க்கு எளிதில் பொருள் விளங்கா வண்ணம் எழுதுகின்றனர். அவ்வாறான விஷயம் ஒன்றேனும் நம் பாநுவில் வருவதில்லை.

இம்மட்டேயோ இவ்வருஷத்தில் சில படங்கள் வைத்து விஷயமெழுதி வருவதாகவும் உத்தேசித்திருக்கின்றோம்.

இங்ஙனம் பலவகையாலும் சிறப்புற்று வருகிற நம் பாநுவைத் தமிழ் மக்கள் யாவரும் ஆதரிக்கவேண்டுமென்று யாம் பிரார்த்திப்பதும் மிகையன்றோ?

தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் வீற்றிருத்தற்கு உரியது இதுவேயாம்.

சென்ற வருஷத்தில் காலந்தோறும் விஷயதானஞ்செய்து கனப்படுத்திய கல்விமான்கட்கு யாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம். பாநுவின் விளக்கத்திற்கு இக் கல்விமான்களே முதற்காரணமானவர்கள். இவ்வருஷத்தும் முன்போலவே காலந்தோறும் விஷயதானம் செய்து வருவார்களென்று நம்புகிறோம்.

எமது வேண்டுகோளுக்கு இணங்கி நன்கொடையாகப் பொருளுதவி செய்து ஆதரித்த கனவான்கட்கும், அபிமானத்துடன் பாநுவைப் பெற்றுச் சந்தாத்தொகையை யுரியகாலத்தே யுதவிய கையொப்பநேயர்கட்கும் நன்றி கூறுகின்றோம்.

இவ்விரு திறத்தார் புரிந்த பேருதவியும் தமிழ் மக்கள் யாவரும் கொண்டாடத்தக்கதொன்றே.

நமது சந்தாதார்கள் இவ்வருஷ (1915) சந்தாத்தொகை ரூ. இரண்டையும் அடுத்த பிப்பிரவரிமீ 15உ க்குள் எமக்குக் கிடைக்கும்படி மணிபார்டர் செய்யப் பிரார்த்திக்கின்றோம். இங்ஙனம் மணியார்டர் செய்யாதவர்கட்கு பிப்ரவரிமீ பத்திரிகையை வி. பி. போஸ்டில் அனுப்புவோம். அப்போதாவது சந்தா செலுத்திப் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு ஆதரிப்பார்களாக. பத்திரிகை பெறுவதற்கு விருப்பில்லாதவர்கள் பிப்ரவரி 10உ க்குள் எமக்கு எழுத்து மூலமாக அறிவித்தது விடுவது நலம். மௌனமாயிருந்து வி. பி. வந்தவுடன திருப்பியனுப்பும் வழக்கம் கொள்ளாதிருக்கவே மிகவும் வேண்டுகிறோம்.

இப்பத்திரிகைக்குச் சந்தாதார் சேர்க்கவேண்டி சென்னை, சேலம், கோயமுத்தூர், தூற்றுக்குடி முதலிய இடங்கட்கு யாம் சென்றிருந்த காலத்தில் ஆங்காங்குள்ள எமது நண்பர் சிகாமணிகள் எமக்கியற்றிய பேருதவி என்றும் எம்மனத்தை விட்டகலாது.

பாநுவின் சந்தாதார்கள் தங்கள் தங்கள் நட்பாளர்கட்குப் பாநுவின் வளர்ச்சியையும் தன்மையையும் எடுத்துக் கூறி அவர்களையும் சந்தாதார்களாக்கி வைப்பார்களாயின் மிகப் பேருபகாரமாகும்.

பரம்பரைப் பிரபுகுலதிலகராகிய தேவிகோட்டை ஸ்ரீமாந் வீர. லெ. சித. இராமநாதன் செட்டியாரவர்களும் (பாவாலி ஜமீந்தார்), செந்தமிழபிமானமும் செல்வச் சிறப்பும் கொடை வண்மையு மாதிய நன்மை பலவாய்ந்த முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ்செட்டியார் அவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவான்களிலொருவரும் இளையான்குடி ஸ்பெஷல் மேஜிஸ்திரேட்டுமாகிய மகா-ா-ா-ஸ்ரீ எம். கே. எம். அப்துல்

காதிறு ராவுத்தரவர்களும் பாநுவின் ஆக்கங் கருதி வருஷந்தோறும் 25 ரூ. நன்கொடையளித்து வருவதாகவும் தூற்றுக்குடி வக்கீலும் தமிழ் வித்துவான்கட்குத் தாய் போன்ற பரோபகாரியும் நூலாராய்ச்சியிலேயே நெடு நேரம் போக்கி மகிழ் வரும் ஆகிய ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் வருஷந்தோறும் ரூ. 12 நன்கொடையளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள். இன்ன கனவான்கள் மற்றும் பலஉதவிகளும் செய்து வருகின்றார்கள். இவர்களது செந்தமிழபிமானமும் வள்ளற்றன்மையும் யாவராலும் கொண்டாடற் பாலவேயாம். இவர்களைப்போல் இன்னும் சிலகனவான்கள் முன்னின்றுதவுவார்களாயின் பாநுவின் வளர்ச்சி இன்னமும் பெருகுமென்பதில் யாது தடையுளது?

“மெனாட்டுக்கலைஞானம், மனிதனது எழுகூறு, ஹெலெநாம்பாள்” என்ற 3 விஷயங்களும் பல்லடம் தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களால் எழுதப்பெறுகின்றன. இவர்கள் தமக்குள்ள உத்தியோக வேலையுடனும் ஆத்மார்த்தமாகச் செய்துவரும் சிறந்த அப்பியாசங்களுடனும் மாதந்தோறும் மூன்று விஷயதானம் இடைவிடாது செய்து வருகின்றார்கள். இவர்களது பரோபகார காருண்யத்தன்மையும் ஊக்கமும் விடாமுயற்சியும் மிகச் சிறந்தன. பாநுவின் அபிவிர்த்தியைப் பற்றி இடைவிடாது கருதி ஒவ்வொரு சமயத்தும் எமக்கு வேண்டுவ கூறியும் உதவியும் வருகின்றார்கள். பாநுவைப்பார்க்கும் யாவரும் இவர்களை வாழ்த்துவார்களென்பது துணிபு.

நாளுக்கு நாள் வளர்ந்தோங்குமாறு பாநுவுக்குத் திருவருள் செய்த பரமகருணாநிதியாகிய முழுமுதற்கடவுள் திருவடித் தாமரை மலர்களைச் சிந்தித்து இடையறாது வாழ்த்துகின்றோம். சுபம். சுபம்.

பத்திராதிபர்.

2538.

சைவசித்தாந்தம்.

[முன் தொடர்ச்சி]

கன்மம் போகத்திற்குக் காரணமென்று கூறப்பட்டுள்ளது; போகம், சுகதுக்க ரூபமாயிருக்கும். அதற்கு ஏதுவாங் கன்மம், சரீரமுண்டான பின்னுண்டாகு மாதலாலும், சிருட்டி யாரம்பத்தில் கன்மம் மின்மையாலும் சரீராதிக ளெப்படி வரும்? ஆதலால் கன்மம் அநாதி யென்பது கூடாதெனில், சிருட்டி யாரம்பத்திலும் ஆன்மாக்களுக்குப் பலவிதமான தேக சம்பந்த மிருப்பதால் கன்ம மநாதியென்பது சித்தம். அல்லாவிடில் பலவிதமாகச் சரீரம்வரக் காரணமில்லை, ஆன்மாக்களுக்குச் சரீராதிகளும் போகங்களும் பலவிதங்களென்று கூறப்பட்டுக் காணப்படுகின்றமையால் அவைகள், சருமமின்றி முடியா, ஆதலால் சிருட்டியாதி காலத்திலும், வாசனரூபமாகக் கன்மமுண்டு. வித்தும் முளையும் ஒன்றற்கொன்று காரணமாய் முற்பிற்பாடு கூறப்படாமை போல கன்மத்திற்குங் கூறப்படாமை கண்டுகொள்க.

உதாரணம்—சித்தியார்.

உடற்செயல் கன்ம மிந்த வுடல்வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினையிந்த வுடல் வினைக்குந்
தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட் டநாதி வித்தி
னிடத்தினின் மரம ரத்தின் வித்தும்வந் திடையயு மாபோல்.

எனக் கூறியவற்றாற் காண்க.

உருவுங் கன்மமும் சடமாகலின் அவை தாமே மறுமைக்கண்ணே வந்து கூடமாட்டா. உயிர் முற் பிறவியில் ஆக்கப்பட்டுக் கிடந்த இருவினைக் கீடாக இப் பிறப்பின்கண் வரும் இன்ப துன்ப நுகர்ச்சியான் மேலும் வினை யேறுதலின் அதனால் மீளமீளப் பிறந் திறத்தலும் துறக்க நிரயங்களிற் சென்று மீடலு முடைத்தாகலான் உடம்பொடு நிலைபெறும் அவ் வினைப் பயன்களை முதல்வனே தனது ஆணையால் கூட்டுவன். இறைவன் ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை ஏற்றுக்கொண்டு பயனளித்தல் யாதுகாரணம் பற்றி யெனின் உயிர்கள் வீடுபேறு அடைதற் பொருட்டு வைத்த கருணையாலேயாம், அநுக்கிரகஞ் செய்தல் கருணையென்றல் ஒக்கும்; நிக்கிரகஞ் செய்தல் எப்படிக் கருணையென்று சொல்லலாமெனின் காரணமாகிய வினை இரு வேறு வகைப்பட நிகழ்ந்தமை

யின் காரியமாகிய பயனும் இருவேறு வகைப்படச் செய்தருளுவன். அநுக்ரகஞ் செய்தலையன்றி அங்ஙனம் அகிதஞ் செய்தாரைக் கண்டித்தலும் கருணையினால் நல்வழிப் படுத்தற் பொருட்டேயாம்.

உதாரணம்.

நிக்கிர கங்க டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்ச் சச்சம் பண்ணி
யிக்கிர மத்தினாலே யீண்டற மியற்றி டென்ப
னுக்கிர மத்தினாலு மிறைசெய லருளே யென்றும்.

என்பதாலறிக.

கருமமலத்தி னிலக்கணம் முற்றியது.

இனி மாயாமலத்தினியல்பு.

சுத்தமாயை.

இனிச் சுத்தமாயையானது, நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், பரமசிவனாலே நித்தியம் அதிட்டிக்கப்படுவதாய், மலகன்மங்களோடு விரவாததாய், சொல் வடிவும் பொருள் வடிவுமாய், நாத முதலியவற்றின் வழியால் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குதற்குக் காரணமாய், சுத்த தத்துவம் ஐந்தும், நால் வகை வாக்கும், ஐம்பத்தோ ரக்கரமும், எண்பத்தொரு பதமும், சத்தகோடி மகா மந்திரங்களும், இருபத்தெட் டாகமங்களும், இருநூற்றேழுபாகமங்களும், நான்கு வேதங்களும். பதினெண் புராணங்களும், ஆறு சாஸ்திரங்களும், அறுபத்துநான்கு கலைகளும், சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம். மகேச பேதங்கள், அரன், என் றிவர்களுக்கும் விஞ்ஞான கலர், பிரளயாகலர்களுக்கும், உண்மைச் சரியை கிரியை யோகங்களை அநுட்டித்தவர்களுக்கும், தநுகரண புவன போகங்களும், பஞ்சகலைகளும், சுத்த காலமுதற் சுத்த நிலமீறாகிய முப்பத்தொரு தத்துவமும், பிறத்தற்கு உபாதான காரணமாய், சடமாய், மயக்கஞ் செய்யாததாய் இருக்கும். விந்து, குண்டலினி, சுத்த வித்தியை பிரமம், ஈஸ்வரனுடைய பரிக்கிரக சத்தி, சுத்தமாயை என்பன ஒருபொருட் கிளவி. இந்தச் சுத்தமாயை உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை யெனின், மந்திரேசுரர், மந்திரமகேசுரர், அணுசதாசிவர், அநந்தேசுவராதிகளின் சரீரமும் அதற்கு ஆதாரமான தத்துவ புவனாதிகளும், உபாதானத்தோடு கூடியது, காரியமாதலால், கடம்போல வென்க. இவ்விடத்துச் சிவ சத்தியே உபாதானமென்ன லாகாதோ வெனின், ஆகாது. அது சித்ரூபமாதலால், அசித்தல்லவோ பரிணமிக்கு மென்க.

இப்படிப்பட்ட சுத்தமாயையினின்றுஞ் சிவதத்துவந் தோன்றும். இதில் சூக்குமை வாக்கு இருக்கும், அங்கே சாந்திபதீத புவனங்களுமிருக்கும். இது சிவனால் அதிஷ்டிக்கப்பட்டபடியால் சிவதத்துவமென்னும் பெயராயிற்று. இச்சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவந் தோன்றும். இங்கேதான் பைசந்தியென்னும் வாக்கும், நிவிர்த்தி முதலான கலைகளுமிருக்கும். இது சிவசத்திக்கு அதிஷ்டானமாதலால் சத்திதத்துவமென்னும் பெயராயிற்று. இத்தத்துவத்தினின்றுஞ் சதாசிவ தத்துவந்தோன்றும். இது மத்திமை யென்னும் வாக்குக்கு அதிஷ்டானமானதால் காமிக முதலான தந்திர பேதங்களுக்குக் காரணங்களாயும், சாமீப்பியாதி முத்தியடைந்திருக்கிற பிரணவர் முதலானவர்களின் தனுகரண புவனாதிகளுக்கு காரணமாயுமிருக்கும் இத்தத்துவத்தினின்றும் ஈசுவரதத்துவந்தோன்றும். இதில் தன் செவிக்கு மாத்திரங் கேட்குஞ் சூக்குமவைகரியிருக்கும். இது அநந்தேசுவரர், அந்தப் பதம் பெற்ற உருத்திரர் சரீர புவனாதிகளுக்குக் காரணமாயிருக்கும். இத்தத்துவத்தினின்றும் சுத்தவித்தியாதத்துவந் தோன்றும். இதில் பிறர் செவிக்குங் கேட்குந் தூலவைகரியிருக்கும். இது வைகரியென்னும் வாக்குக்கு அதிஷ்டானமாகையால் சப்தகோடி மகா மந்திரர் மந்திரமகேசர் முதலானவர்கள் சரீர புவனாதிகளை யுண்டாக்கும். சிலர் சிவன் வழியாகவே யிலக்கணங் கூறுகின்றார்கள் அஃது எப்படி யென்னில், ஞானமாத்திரத்தோடு கூடிய பரமசிவனாலே யதிஷ்டிக்கப்பட்ட தத்துவம் சிவதத்துவம். கிரியையோடு மாத்திரங்கூடிய சிவனாலே அதிஷ்டிக்கப்பட்ட தத்துவம் சத்திதத்துவம். இரண்டு முள்ளவரால் அதிஷ்டிக்கப்பட்டது சதாசிவ தத்துவம். கிரியை அதிகரித்தவரால் அதிஷ்டிக்கப்பட்டது ஈசுவரதத்துவம். ஞானம் அதிகரித்தவரால் அதிஷ்டிக்கப்பட்டது சுத்த வித்தியா தத்துவம். சிலர் சிவதத்துவ முதலைந்துதத்துவங்களும் விந்துவின் காரியமே யென்கின்றார்கள். இந்தச் சிவதத்துவமுதலானவை விந்து முதலானவையோடு கூடிய சிவனுடைய படங்குடிலானாற்போல விருத்தி ரூபமான காரியமாகும், நெய்யிலுண்டாகிய புழுப்போல பரிணமமல்ல, எங்குங் காரணத்தோடு கலந்து முன்னவஸ்தை நீங்காமையால் பிரளயம் வரையில் இருப்பதால் தத்துவமெனப் பெயர் பெற்றது.

இந்தச் சுத்த தத்துவமானது கன்ம சம்பந்த மின்மையால் பந்தகமாகமாட்டாது. சங்கை-சுத்ததத்துவ வாசிகளுக்குப்போக வேதுவான கன்மமின்மையால் எப்படி விசித்திரமான போகம் உண்டாகலாம்? ஞானவேதுவான கலையின்மையால் எப்படி ஞானம் உண்டாகலாம்? விஷய நோக்கத்திற்கேதுவான வித்தையின்மையால் எப்படி விடய நோக்கமுண்டாகலாம்? இராகமின்மையால் எப்படி விடயத்தில் சக்தியுண்டாகலாம்? கால மின்மையால் போகமிவ்வளவுதானென்று எப்படி யளவிடக்கூடும்? நியதியின்

மையால் போக்தாக்களின் பேத நியமமெப்படியுண்டாகலாம்? என்னில், உத்தரம்—, சுத்தாத்துவாவிலும் விந்துமயமான கலாதி தத்துவங்களும் தனு கரண புவனபோகங்களுமுண்டு. அவ்விடத்தில் போக பேதத்திற்கேது வான கன்மமில்லாமற்போன போதிலும் மலபரிபாக வசத்தால் விசித்திர மான போகமுண்டாகும். எப்படி யென்னில் எவனுக்கு மலபரிபாக மிகு ந்திருக்கின்றதோ அவன் சாதாக்கிய தத்துவத்தில் போகங்களைப் புசிக்கின் ருன். எவனுக்கு மலபரிபாகம் அதில் சிறிது குறைவா யிருக்கின்றதோ அவன் ஈசுவர தத்துவத்திலும் சுத்தவித்தியா தத்துவத்திலும் போகங் களைப் புசிக்கின்ருன், ஆகையால் இவ்விடத்தில் கன்மம் போக காரணம ல்ல. பின்னும் இவ்விடத்துத் துக்கரூப போகமின்மையால் சிவனுக்குச் சரியல்லாதவன் இரக்கமற்றவன் என்னுங் குற்றமில்லை; ஆகையால் சுத்தா த்துவாவில் மலபரிபாகத்திற்குத் தக்கபடி சுகரூபமாகவே யிருக்கும் போக முண்டு. இப்படியாக ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. இந்த சுத்த தத் துவங்க ளெல்லாம் பிரளயாகலர் சகலர்களுக்குப் பிரேரக காண்ட மென் னப்படும்.

இனி நால்வகை வாக்காவது;—சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்பனவாம். இவற்றுள் சூக்குமை வாக்காவது:—பர சரீரத்தினுள் ளாக நாத மாத்திரையாய் விளங்குதலும், ஞான மாத்திரைக்கு ஏதுவா தலு மாகிய இலக்கணத்தையுடையதாம். பைசந்திவாக்காவது:—மேல் விள ங்கித் தோன்றுவனவாகிய பஞ்ச வன்னங்களையுஞ் சூக்கும ரூபமாய் அடை வுபட வொடுக்கி நிற்கும் மயில் முட்டையி னீர்போலப் பலவகைப்பட வெழுத்துக்கள் மத்திமைத் தானத்துப் பிரிவுபட விளங்கித் தோன்று முறைமையினை அடக்கி மிகவுஞ் சூக்கும ரூபமாய்க் கொண்டு சிந்தையின் கண் நிற்றலும், நிருவிகற்ப உணர்விற்கு ஏதுவாதலுமாகிய இரண்டு மிலக் கணமாகவுடையது. மத்திமை வாக்காவது செவியிற் கேட்கப்படாததா யும், மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்குத லுண்மையாற் சொல் லுவான் தன்னுள்ளே யுணருஞ் சவிகற்ப வுணர்வுக்கு ஏதுவாய் உள் ளேயுணரப்படும் ஓசையாதலும், பிராண வாயுவின் தொழிற்பா டின்றி உதான வாயுவின் தொழிற்பாடு மாத்திரையே ஆண்டுண்மையிற் சூக்கும ரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும் பல்லிதழ் நாவண்ணங்களிற் பட்டுச் சிதறிப்போத லின்மையுமாகிய இவ்விரண் டிலக்கணத்தானு முறை யேபைசந்திக்கும் வைகரிக்கும் வேறு யறியப்படுவது.

[இன்னும் வரும்]

சுப்பிரமணியபிள்ளை,

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் மடம்.

திருநீறு.

"பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டியுநீ றும்."

என்றபடி, அநாதிமலமுத்தனாகிய பரமசிவனது மெய்யடியார்களுக்கு அறிகுறியாயிருப்பவை அவர்கள் உடம்பில் பூணுதற்குரிய உருத்திராக்ஷமும் விபூதியுமேயாம். இச்சிவசின்னங்களுள் முக்கியமாகிய திருநீற்றின் பெருமையைப்பற்றித் திருவருட்பிரகாச வள்ளலாராகிய ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருநீற்றுப்பதிகத்தில் நின்று சிலவிஷயங்களை இங்கு எடுத்துக்கூறுகின்றாம்.

இப்பதிகப்பொருளை ஆராயின், இதனுள் மூன்றுவிஷயங்கள் கூறப்பட்டுள்ளனஎன்பது, தோன்றும். அவையாவன:—(க) இத்திருநீறு எத்தன்மையானது என்னும் அதன்சிறப்பும், (உ) இதனை அணிதற்குரியார் இன்னார் என்பதும், (ந) அணிந்துகொள்ளுதலால் அடையும் பயன் இன்னவை யென்பதுமாம். இவ்வாறு இப்பதிகவிஷயத்தை முத்திறமாகப்பகுத்து முதலில் இத்திருநீற்றின் தன்மையை விவரிப்போம்.

இத்திருநீறு மந்திரதந்திர உபதேச ஸ்வரூபமாகநின்று அம்மந்திரதந்திர உபதேசங்கள் தரும்பயனை அன்போடு அணிபவர்களுக்குக் கொடுக்குமென்பார், 'மந்திரமாவது நீறு' 'தந்திரமாவது நீறு' என்று கூறினர். இதனால் மந்திர தந்திர உபதேசங்களை அறியாதவர்களுக்கும் இவ்விபூதியை அன்போடு தரித்துக்கொள்ளலாலே சிவனருள் சித்திக்கும் என்பது பெறப்பட்டது. (மந்திர தந்திரங்களைக் கூறினமையாலே உபதேசமும் வருவிக்கப்பட்டது.) இத்திருநீற்றின்பெருமை, ஷண்மதத்தாருக்கும் பொதுவாகிய வேதங்களிலும், சைவசமயிகளுக்கே உரியனவாகிய ஆகமங்களிலும் பிரதிபாதிக்கப் பட்டுள்ளது என்பார், 'வேதத்திலுள்ளது நீறு,' 'சமயத்திலுள்ளது நீறு' என்றும், இஃது தேவர்கள் முனிவர்கள் முதலான பெரியோர்களாலே முத்திசாதனமாகக் கொண்டாடப் படுவதென்பார்,

'துதிக்கப்படுவது' 'தக்கோர் புகழ்வது' 'எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்துந்தகையது 'ஓதத்தகுவது' 'பயிலப்படுவது' 'பேசவினியது' 'பாவவினியது' என்றும் பலவிதமாகச்சிறப்பித்தார்: இத்திருநீறு உண்மைச்சமயமாகிய சைவத்துக்குரிய சின்னமாதலினாலே, இஃது என்றென்றும் அழியாது போற்றப்படும் என்பார், 'உண்மையிலுள்ளது' 'சத்தியமாவது' 'அந்தமதாவது' 'அருத்தமதாவது' 'தத்துவமதாவது' என்று வற்புறுத்தினர். சராசரங்கள் அனைத்தும் மகாசங்காரகாலத்தில் நீறாகமடிந்து பின்னர் சிருஷ்டிகாலத்தே அந்நீற்றினின்றும் உண்டாதலினாலே அனைத்துக்கும் 'அந்தமாவ'தென்றும் தனக்கோர் அந்தமில்லாததென்றும் கூறினர்.

'பூசப் பூசப் பொன்னிறமாம்' என்றபடி பூசுவோர்க்கு அலங்காரமா யிருத்தலின், 'சுந்தரமாவது', 'காணவினியது', 'பூசவினியது', 'பொருத்தமதாவது' என்றும் அஷ்ட ஐச்வரியங்களையும் ஆதரித்துத் தரிப்பவர்களுக்கு அருள் வழியே கொடுப்பதாதலின் ஐச்வரிய காரணமாவது என்பார் 'பாக்கியமாவது' என்றும், நின்மலமாய் தர்மஸ்வரூபமாய் இருப்பதென்பார் 'புண்ணியமாவ'தென்றும், என்னே இதன் பெருமையைப் பரக்கக் கூறுவது?, இஃது சர்வ சுதந்திரமும் சர்வ சத்தியமுள்ள பரமேச்வரனுக்கும் துணைக்கருவியாய் நின்று அவரது எண்ணங்களை முடிப்பது என்பார் 'எயிலது அட்டது' என்றும் கூறினார்.

இனிப், பெரியோர் அவலம்பித்த காரியத்தை மற்றவர்களும் மேற்கொள்ளுதல் உலகத்தில் இயற்கையாதலின், இதனையணிந்து பேறு பெற்றவர்கள் ஒப்புயர்வற்ற பெரியவர்களே என்பதைக் கூறுகின்றனர். இஃது பிரமாதி தேவாகளாலும். அகத்தியர் முதலான முனிவர்களாலும் மண்ணுலகத்தில் எண்ணிறந்த புண்ணியங்களைச் செய்த பெரியோர்களாலும், மகா மேன்மையை யுடைய பத்தர்களாலும் அணியப்படுவதென்பார், 'வானவர் மேலது நீறு' 'மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு', 'முனிவ ரணிவது நீறு', 'புண்ணியர் பூசும் வெண்ணீறு', 'இராவணன் மேலது நீறு'

என்றும் கூறினர். ஆதலின் சுவர்க்க மத்திய பாதாள மென்னும் மூவகை யுலகங்களிலும் முதன்மை பெற்றவர்களுள் இவ்விபூதியை விரும்பி யணியாதார் இல்லையென்பது பெற்றாம்.

இனி இவ்விபூதியை அன்போடு விதிப்படி அணிந்துகொள்வார்களுக்குச் சிவனருளாலே தர்மார்த்த காம மோக்ஷங்களாகிய எவ்வகை பயனும் சித்திக்கும் என்பதை விவரிக்கின்றார். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்றபடி உயிர்களுக்கு இம்மை மறுமைப்பயன்களை யடைதற்குரிய செல்வமுதலிய பலவகைச் சாதனங்களிலும் முக்கியமாகிய பிணியில்லாத வாழ்க்கையைக் கொடுப்ப தென்பார். "வருத்தம் தணிப்பது" "ஏல உடம்பிடர் தீர்ப்பது" என்றும், கடற்றிரைபோல ஒன்றின்பின் ஒன்றாக ஓயாமல் வந்து கொண்டிருப்பனவாகிய மனக்கிலேசங்களையும் குறைகளையும் நீக்கிச் சந்துஷ்டியையும் சுகத்தையும், மேன்மையையும், கொடுப்பதென்பார், "அவலமறுப்பது" "வெந்துயர்தீர்ப்பது" "புன்மை தவிர்ப்பது" பேணியணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது" "மரணம் தகைவது" சேணம் தருவது" என்றும் கூறினார். அன்றியும் ஆன்மாக்களுக்குப் புத்தியையும், போகங்களையும், சத்தியையும், சித்தியையும் கொடுப்பதென்பார் "போகம் தருவது", "பத்தி தருவது", "கவினைத் தருவது", "மதியைத் தருவது" "பெருந்தவத்தோர்களுக்கெல்லாம் ஆசை கெடுப்பது" என்றும் கூறினார். இங்ஙனம் இம்மைக்கண எண்ணிறந்த போகங்களைக் கொடுப்பதேயன்றி மறுமையிலும் சுவர்க்காதி போகங்களைக் கொடுத்து அடைதற்கரிய ஆனந்தபேற்றையும் தருவது என்பார். "இருமைக்கு முள்ளது", "வானமளிப்பது", துயிலைத் தடுப்பது" என்றும் "முத்தி தருவது" என்றும் கூறினர்.

ஆதலால் இத்துணைச்சிறப்பு வாய்ந்த வீபூதியை இகழாமல் விரும்பித்தரித்தல் சைவசமயத்தாராகிய ஒவ்வொருவருக்கும் கடன் என்பது நாம் சொல்லவும் வேண்டுமோ? ஆதலின் வீபூதியை நாடோறும் அன்போடு தரித்துச் சிவபெருமானுக்கடியராகி இகபர சௌக்கியங்களை யாவரும் பெறுவாராக.

எஸ். முத்து ஐயர், பீ. ஏ.,
மசுலிப்பட்டணம்.

தேனும் தேனீயும்.

[முன் தொடர்ச்சி]

இனி அவர்கள் எவ்விதச் சூழ்ச்சியால் அதனைக் கூட்டிற்குள்ளேயே இருக்கும்படி செய்கின்றனரெனப் பார்ப்போம். சிற்றீக்கள் எவ்விதத்தினும் இராணி ஈ பெறக்கூடாத விஷயம் அவை எழுப்பும் ஓர் வகை அதி துக்கப் பேரிரைச்சலால் தேனீ வளர்ப்போர் அறிவர். இவ்விரைச்சல் கேட்ட 30 மணி நேரத்திற்கெல்லாம் அவர்கள் தான் வளர்க்கும் வேறொரு கூட்டிலுள்ள இராஜ மாளிகையினின்றும் பருத்துக்கொழுத்த ஓர் பெண் ஈயையேனும் அல்லது இராணி ஈயையேனும், அதன் கொட்டுக்கு உட்படாமல் ஓர் வகைச் சூழ்ச்சியால் எடுத்து அதனை அரசி இழந்த ஈக்களுக்கு அரசி ஆக்குவர்.

ஆனால், "இது என்ன ஒரு சாமானிய காரியமா? வேறு கூட்டீக்களை வெருட்டிக்கொல்லும் ஈக்கள் இவ்வந்நிய கூட்டு இராணியை மட்டும் அங்கீகரித்திடுமோ?" என சிலர் ஐயமுறலாம். இவைகட்கு அதனை அங்கீகரித்திட ஒரு சிறிதும் மனமில்லைத்தான். ஆயினும் தேனீவளர்ப்போர் ஓர் உபாயம் செய்து அவற்றைத் தாம் கொடுக்கும் அரசியினை அத்தியந்த சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் அங்கீகரித்திடச் செய்வர். அவ்வுபாயம் தான் யாதெனப் பார்ப்போம்:

அனேகர் சிறு நுண்ணியகம்பிகளால் அதிநேர்த்தியாகப் பின்னப்பட்ட சின்னஞ்சிறு சுண்டெலிகளைப்பிடிக்கும் பொறிகளைப்பார்த்திருக்கக்கூடும். தேனீ வளர்ப்போரிடம் பார்வைக்கு இச்சுண்டெலிக் கூடுபோன்றுள்ளதும் ஆனால் அதினும் அதிநுட்பமான வேலைப்பாடுள்ளதுமான ஓர் கம்பிக்கூடு இருக்கும். இக்கூட்டினுள் நாம் சற்று முன்கூறிய அரசியை (அல்லது பெண்ஈயை) அதனுடன் பழகிய அதன் பரிவாரங்களிற்சிலவற்றுடன் பிடித்துப்போட்டு அக்கூட்டின் துவாரத்தை மெழுகினால் அடைப்பர். பின்னர் இக்கூடு சர்வஜாக்கிரதையுடனும் ஈக்களிருக்கும் தேன்கூட்டின் முற்புறத்தில் வைக்கப்படும். அப்பொழுது அக்கூட்டின் காவல்ஈக்களிற் சில வாசனையால் புதியஈக்கள் அண்மையில் இருப்பதைஉணர்ந்து அவற்றைக் கொல்லுமாறு அதி உக்கிரத்துடனும்கொட்டும். கொட்டி என்னபிரயோஜனம்? கம்பியிருந்து காக்கும்பொழுது ஈக்களுக்குச்சிறிதேனும் சேதம் விளையுமா?

தம்முயற்சியும் எண்ணமும் வீணானதுகண்டு அக்காவல் ஈக்கள் வெகு மூர்க்கமாய்க் கூட்டினைமொய்த்து தம் முழுபலத்துடனும் நெருக்கும். இச்செய்கையால் கல்லைக்கிள்ளிக் கைநோவுறுவர்போல் அவ்வீக்களாய் விடும். முடிவில் இவற்றிற்கு கோபத்தினும் ஆச்சரியமேமேலிட்டு கொட்டுவதையும் நெருக்குவதையும் ஒழித்து பிரமித்து அக்கம்பிக்கூட்டினுள் உள்ள ஈக்களைப்பார்த்தவண்ணமாய் இருக்கும். அகஸ்மாத்தாய் அவற்றுள் ஒன்றன் கண்ணுக்கு அரசி புலப்படும். தக்ஷணமே கோபம் போயே போய்விடும். அவை அரசிக்குச்செய்யவேண்டிய சகல மரியாதையுடனும் பணிந்து அதனை வணக்க ஒடுக்கத்துடன் சூழும். அரசியின்றித்தவித்த தமக்கு அரசு கிடைத்த இச்சந்தோஷ நற்செய்தியை இவை தக்ஷணமே மின்னலினும் அதிதீவிரமாய்க் கூடெங்கும் பரவச்செய்யும். உடனே கூட்டு ஈக்கள்யாவும் ஒருங்குகூடி ஆலோசித்து இவ்வீயை அரசியாக ஏற்கும். பின்னர் இவை கம்பிக்கூட்டை அதிநுட்பமாய்ப்பரிசோதித்து, அடைத்துள்ள மெழுகுத்துண்டைப் பற்றி எடுத்து, இராணிஈயையும் அதன் பழைய பரிவாரங்களையும் வெளிப்படுத்தும். இதுமுதல் அவ்வீ இக்கூட்டின் அரசியாகிக் குடும்ப அபிவிருத்தி செய்து தன் கடமையைச் சரிவரநடத்திவரும்.

அதன் பரிவாரமும் அதனுடன் இருக்க இடம்பெறும். ஒருவேளை அப்பரிவாரம் தம் புதிய இடத்தை விரும்பாது பழைய கூடுநோக்கி ஓடினும் இராணி ஈ எக்காலத்தும் நம்பிக்கை மோசம் செய்யவே செய்யாது! இதனால் இதன் பரிவாரம் ஓடிவிடுமோ? எனில், அவையும் ஓடாது. ஏனெனில் இப்புதிய கூட்டு ஈக்கள் தம்மை வெகுநேரம் மொய்த்து நெருக்கியதால் அக்கூட்டு ஈக்களின் ஓர் வகை வாசனை இவை பெற்றுவிடுகின்றன. ஆகலின் இவை இவ் வாசனையுடன் தம் பழைய கூடு புகின் அதில் உள்ள ஈக்கள் வாசனை பேதத்தைக்கண்டு இவை வேற்றீக்கள் என எண்ணி கொன்றேவிடும். தவிரவும், முதலில் இவற்றிற்குத் தம் இராணியை விட்டுப் பிரிய மனம் வராது. நிற்க இவ்விராணி ஈ இருந்த பழைய கூட்டில் உள்ள ஈக்கள் தமக்கு ஓர் இராணியை நாம் முற்கூறிய எவ்விதத்திலானும் ஒருவிதம் பெறும்.

அரசிழந்த ஈக்களுக்கோர் அரசி கொடுப்போர் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுளது. அஃதென்னவெனில், இராணி ஈ இழந்த 30-மணிக்கு அப்புறந்தான் புதிய இராணி அளிக்கவேண்டும். ஏனெனில் இவை தம் மரித்த இராணியை மறக்கக் குறைந்தது அவ்வளவு காலம் செல்லும். இடையில் கொடுக்கப்படின் அரசி கொல்லுண்டு சாகும் என்பது திண்ணம்.

IX. சோரஈக்கள்

நாம் முற்கூறியபடி ஈக்கள் அரசமாளிகையினின்றாவது, தமது சுய முயற்சியினாலாவது அல்லது தம்மை வளர்ப்போர் மூலமாகவாவது ஓர் அரசி பெறக்கூடாவிட்டால் அவையாவும் சுறுசுறுப்புக் குன்றி பெரும் சோம்பேறிகளே யாகும். தவிரவும் அவைகளுள் ஒற்றுமை என்பது இராது. ஒன்றோடொன்று பொருது துர்வாசமாமுனிவர் சாபத்தால் நவகோடி நாராயணரும் மாண்டதுபோல் மாளும் அல்லது சோர ஈக்களாகும். ஈக்கள் சோரத்தனத்திற் பிரவிர்த்திக்க வேறு காரணங்களும் உள. அவை என்னவென்று பார்ப்போம். பஞ்சகாலத்தில் நாம் பாடுபட்டு அலைந்தும் பட்டினியால் வருந்த நேருவதுபோல் ஈக்களும் தமக்குப் போதுமான ஆகாரம் பெறக்கூடாமல் திண்டாடக்கூடிய காலம் வரும். அக்காலத்தில் இவை பசித்தழல் அவிக்குமாறு கூட்டம் கூட்டமாய்த் தம் கூட்டினின்றும் வெளிக்கிளம்பி வேறொரு கூட்டைத் தாக்கிக் காவல் ஈக்களை வென்று கூட்டினுட் புகுந்து அதில் உள்ள தேன் முதலியவற்றைக் கொள்ளையடித்து, அவற்றைத் தமது உறைவிடம் எடுத்துச் செல்ல முயலும். அப்பொழுது கொள்ளையடிக்கப் பெறும் கூட்டீக்கள் தமது முழு பலத்துடனும் எதிரிகளை எதிர்த்துச் சண்டைசெய்யும். எதிர்க்கும் ஈக்கள் வலி குறைந்திருப்பின், அவை கொட்டுண்டு துரத்தப்படும். அவை வலி மிக்கதாயின், காவல் ஈக்களுக்குத் தப்பி உட்புகுந்து ஆங்கு காணப்படும் ஆகாராதிகளைத் திரட்டிக்கொண்டு வெளிக்கிளம்பி தமது கூடுபுக்குத் தாம் கொண்டுவந்ததை அக்கூட்டீக்களுக்கு அளிக்கும். பின்னர், அவை முன்னிலும் அதிகமாய் வெளிக்கிளம்பி தாம் கொள்ளையடித்த கூடு நோக்கியே திரும்பி, பல்வழியாகவும் அதனுட்புகும். புகுந்த பின்னர் அவை செய்யும் முதல் வேலை இராணியைக் கொல்வதே. (ஏனெனில் அப்பொழுதுதான் கூட்டீக்களுக்குள் ஒற்றுமையிராது என்று அவை நன்றாய் அறியும்) இதன் பின் கூடு கொள்ளைதான். பாவம்! கூட்டில் உள்ள ஈக்கள் என்ன செய்யும்! தாமும் கொள்ளை ஈக்களோடு சேர்ந்து தமது கூட்டையே கலைத்து அழித்து கொண்டமட்டும் தேனை உண்டு அவ்வீக்களுடன் சேர்ந்து வசிக்கும். இவை இங்ஙனம் முதற்கொள்ளையில் சித்திபெறுமாயின், மானிடச்சோம்பேறிகளைப் போலவே கொள்ளைப்பொருளிலேயே பிரியம் கொண்டு சோர ஈக்களாகி வயிறு வளர்க்கும்.

சில சோர ஈக்கள் யாதானும் ஓர் கூட்டின் முன்புறத்தில் நின்றுகொண்டு கூட்டிற்குத்தேன் கொண்டுவந்து கொண்டிருக்கும் ஈக்களை வழிமறித்து நிறுத்தி பயத்தினாலும் பலத்தினாலும் அவைகொண்டுபோகும் தேனைத் தம் வாயிற் கக்கும்படிசெய்யும். அங்ஙனம்செய்வதால் அவற்றின்

மணத்தை அச்சோரஈக்கள் பெற்றுவிடும். உடனே இவை தைரியத்துடன் கூட்டினுட்புக ஆரம்பிக்கும். வேற்றுமணமின்மையாலும் தேனுடன் கூட்டிற்குள் நுழைவதாலும் காவல்ஈக்கள் ஏமாந்து இவைதமது இனத்து ஈக்களே என எண்ணிச்சும்மா உள்ளேசெல்லவிடும். (கூட்டில் இருந்து தேன் எடுத்துச் சென்றால் அல்லவோ சந்தேகத்திற்கிடமுண்டாகப்போகிறது?

சில வேளைகளில் பலாத்காரம் ஏதுவுமின்றியே தேன் களவு போவதுமுண்டு. எங்ஙனமெனில், ஒரு கூட்டு ஈக்கள் வாய் வைத்துக் குடிக்கும் மலர்கள் புற்கள் முதலியவற்றிலேயே வேறு கூட்டீக்களும் வாய் வைத்து குடிப்பதுண்டு. அப்படிச் செய்வதால் இவ்விரு கூட்டீக்களும் ஒரே மணமுடையனவாய் இருக்கும். ஆதலின் இவ்விரு கூடுகளில் ஒரு கூட்டு ஈக்கள் மற்றொரு கூட்டுக்குள் நுழைந்து கொள்ளையடிக்குமாயின், அவற்றைச் சோரஈக்கள் என்னக் காவலீக்கள் தெரிந்து கொள்ளா.

ஈக்கள் தனித்தனியாகவும் திருடப்போவதுண்டு. ஆனால் இவை கூட்டம் கூட்டமாய்ச் செல்லும் ஈக்களைப்போல் தங்கள் முழுப்பலத்திலும் நம்பிக்கை கொண்டு அதிகார தோரணையுடன் செல்லாமல் அஞ்சி நடுங்கிப் பதுங்கியே சர்வ ஜாக்கிரதையுடன் செல்லும். இச்சோர ஈக்கள் யாவும் கொள்ளையடித்த பிற்பாடு தம் கூட்டீக்களுக்குக் கொள்ளையில் ஒரு பங்கு கொடாமல் இருப்பதில்லை நிற்க.

இங்ஙனம் பல் விதத்திலும் தேன் திருட்டுப்போவதால் தேனீவளர்ப்போர்க்கு நேரும் நஷ்டம் இவ்வளவு அவ்வளவல்ல. ஆதலின் அவர்கள் முன்னுக்கு முன்னாலேயே தம் கூட்டுத் தேன் களவு போகாதிருக்கும்படியான வழியைத் தேடிக்கொள்வர். எங்ஙனமெனில் அவர்கள் தம் கூட்டு முகத்துவாரத்தில் புனுகு தடவி வைப்பர். அப்பொழுது சோர ஈக்களும் இப்புனுகு வாசனை பெறும். இவை தமது கொள்ளையில் ஓர் பங்கு தம் இனத்தார்க்களிக்கத் தம் உறைவிடம் திரும்புங்கால் புது வாசனையைக் கண்டுகொண்ட அக்கூட்டீக்கள் இவை வேறு கூட்டீக்களென் மதித்துக் கொட்டிக் கொன்றுவிடும்.

இச்சோர ஈக்கள் ஏனைய ஈக்களைக் கொள்ளையடிப்பதோடு நில்லாமல் மனிதரையும் கொள்ளையடிக்கும். எங்ஙனமெனில், இவைகட் கிரை

கிடையாக் காலத்தில் கரும்புப்பயிர் எல்லாம் பாழ் தான். மகரந்தப் பொடிக்குப் பதிலாய் கோதுமை முதலிய சில்வகைத் தானியங்களை அபகரித்தேனும் உண்டு திருப்திபெறும். இம்மட்டோ? தீம்பண்ட சாலைகள், சர்க்கரைச் சாலைகள் யாவையும் இவை முற்றுகைபோட்டுச் சூறை யிடுவதால் மேற்றிசை வியாபாரிகளுக்குக் கன நஷ்டம் விளையும். சிற்க. வருந்திப் பாடுபட்டுத் தேன் முதலிய சம்பாதிக்கச் சோம்பும் சிற்றீக்களும் சோர மார்க்கத்தில் பிரவிர்த்திப்பதுண்டு.

XII தேனீக்களின் ஆகாரம்.

இதுகாறும் நாம் ஈக்களைப்பற்றி சில கூறிவந்தோம். இனி அவற்றின் ஆகாராதிகளையாராய்வோம்: பூக்களின் ரசமும் பூந்தாதும், பாகும் எனைத் தித்திப்புப் பதார்த்தங்களுமே தேனீக்களின் விசேஷித்த ஆகாரங்களாம் (இவற்றுள் பாகு இராஜஉணவாகும். பூந்தாது ஈஉருப்பெறும் புழுக்களின் ஆகாரமாகும்). தேனீக்கள் எப்படியாவது நிரம்பத் தேன்பெறப் பிரயாசைப் படுகின்றனவேயன்றி நல்ல தேனைப் பார்த்துச் சேகரிக்க வேண்டும் என்ற சிந்தனையே இவற்றிற்குக் கிடையாது. நச்சுப் பூக்களினின்றும் இவை சில வேளைகளில் தேன் எடுக்கும். தேனீக்கள் தண்ணீரும் குடிக்கும். சுத்த தெளிந்த நீரைவிட அழுகி நாற்றமெடுத்து ஊசிக் கிடச்கும் கட்டுக்கிடை நீரும் சிறுநீருமே அவற்றிற்கு அதிகப் பிரியமாம். இவ் வஷயங்களே எரிச்சலும் கடுப்பும் வேதனையும் விளைவிக்கக் கூடிய அவற்றின் கொட்டிற்குக் காரணம் போலும். இவற்றிற்குப் பல்லிரண்டும் இரைப்பை இரண்டும் உள. இவ் விரைப்பைகளுள் ஒன்றை தேன் சேர்க்கவும் மற்றொன்றை அவை உட்கொள்வன ஜீரணிக்கவும் உபயோகித்துக்கொள்ளும்.

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.
&
Asst. Master A. M. High School, Madura.

மன ஏகாக்கிரம்.

[முன் தொடர்ச்சி]

சரீரத்தைப்போஷிக்கத்தக்க ஆகாரங்கள் பல்வகைப்படுமாயினும் அவற்றுள் தற்காலத்தில மனிதருடைய கவனத்தை அதிகமாக இழுப்பவை உபகாரணங்களாகாநின்ற காய்கறிபதார்த்தங்களும் மாமிசாதிகளுமேயாம். எவ்வகை ஆகாரத்தின் குணகுணமும் அதனையுட்கொள்வானது சரீர இயற்கையின் பேதத்தையும மனோநிலையின் உயர்வுதாழ்வையும் சார்ந்திருப்பனவாயினும் மேற்கூறிய இருவகை உபகரணங்களுள் காய்கறிபதார்த்தங்கள் சுத்தமாயும் மாமிசாதிகளைப் பார்க்கிலும் ஜீரணிப்பது சற்றுகடினமாயும் இருக்கின்றன. மாமிசாதிகளோ ஜீரணிப்பது லகுவாயிருப்பினும் சீக்கிரத்தில் அழுகிப்போய், ரோகமுண்டாவதற்கு ஆஸ்பதமாயிருக்கின்றன. தவிரவும், அவைகள் நல்லஸ்திதியில் இருக்கின்றனவோ, அல்லது கெட்ட ஸ்திதியில் இருக்கின்றனவோ என்று பிரித்தறிவது தேர்ந்த வைத்தியர்களல்லாத சாதாரண ஜனங்களுக்கு அசாத்தியமாகவும் இருக்கின்றது. சிலபட்டணங்களில் பக்ஷிப்பதற்காகக் கொல்லப்படவேண்டிய பிராணிகள் ரோகத்தால் பீடிக்கப்பட்டவையோ அல்லவோ என்பதை பரீக்ஷித்து அநுவதிப்பதற்காக டாக்ட்டர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் அவர்களில் அநேகர் இவ்விஷயம் சம்பந்தித்த அவர்களுடைய கடமையைச் செலுத்துவதில் அஜாக்கிரதையுள்ளவர்களாகவும் இவ்வதிகாரத்தைத் தங்கள் ஊதியம் பெருகுவதற்கு ஓர் முக்கியவாயிலாகக் கருதுபவர்களாகவும் இருக்கிறார்கள். காய்கறிபதார்த்தங்களோடு ‘பயறு’ வகைகள்முதலியன கூடச்சேர்த்துப்புசிப்பதனால் அவைகள் சரீரத்துக்கோ மனதுக்கோ சக்திகொடுப்பதில் சற்றும் மாமிசாதிகளைப்பார்க்கிலும் குறைந்தவையாகா. காய்கறிபதார்த்தங்கள் ஜீரணிப்பது சற்று கடினமாயினும் மாமிசாதிகளைப்போல அவ்வளவு லகுவாக ரோகோற்பத்திக்கு ஏதுவாகமாட்டா. எப்ட்டியோப்பேதி (Ethopathy) என்

னும் ஓர் நூதனவைத்தியசாஸ்திரத்தை உண்டுபண்ணின டாக்டர் டட்டன் (Dr. Dutton) என்பவர் சரீரம் ஆரோக்கியநிலையில் இருக்கவேண்டுமாயின் மூன்று 'ய்ப்' களையும் தள்ளிவைக்கவேண்டுமென்கிறார். மூன்று 'யப்' (f) கள் யாவையெனில் அவை மூன்று அங்கிலவார்த்தைகளின் முதல் அக்ஷரங்களாகும். அம் மூன்று வார்த்தைகளின் பொருள்கள் யாவையெனில் மாமிசம் (Flesh) மீன் (Fish) கோழி (Fowl) என்பவைகளேயாம். ஆனால் ஜீரண சக்தி சற்றுமில்லாதார்க்கு காய் கறி பதார்த்தங்கள் குணம் செய்யா. சரீர ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியகமாக இல்லாதபொழுதோ அல்லது மருந்தாக உபயோகிக்க வேண்டிவாராதபொழுதோ வெறும் இச்சையின் வசப்பட்டு மாமிசாதிகளைப் பக்ஷிப்பதில் பிரீதியுடையார் மிலேச்சர்களே என்றுசொல்லாதுவேறுயாதுபெயரிட்டுஅவரைக்கூப்பிடலாம்? சிலசைவப்பழங்கள் மாமிசாதிகளின்வகைகளில் எதோ ஒன்றை ஔடதமாக உபயோகித்தால் தங்களுக்கு நேரிட்டிருக்கும் கொடிய ரோகம் நிவிர்த்தியாகக்கூடியதாக இருப்பினும், மாமிசாதிகள் புசிக்கக்கூடாதென்று தங்கள் பிராணனை விடவாயினும் மனம் ஒருப்படுகிறார்கள். இத்தகையோரும் *மற்றவர் இனமேயாவர். இவ்விஷயத்தை இனியும் விரிக்கில் பெருகுமாதலின் இம்மட்டோடு நிறுத்தி பானத்தைப்பற்றி விசாரிப்பாம்.

பான சாதனங்களுள் பல ஆகாரங்களாகவும் அதாவது தாகத்தை யடக்குவதோடு மாத்திரம் நில்லாமல் பசியை அடக்குவனவாகவும் இருக்கின்றன. அங்ஙனமுள்ள சாதனங்களுள் முதல்தரமானது பசுவின்பால் என்று சொல்லலாம். பிரவர்த்திகள் சற்றும் இல்லாத ஒருவன் பால் மாத்திரமே சாப்பிட்டு ஜீவிக்கலாம் என்பது மாத்திரமல்ல சரீரத்தையும் ஆரோக்கிய நிலையில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் பானத்திற்காக மாத்திரம் உபயோகப் படுத்துவதற்கு ஜலமே சிறந்ததென்று கூறலாம். சுத்த ஜலத்தில் அதாவது பச்சைத் தண்ணீரில் சரீர போஷணைக்கு வேண்டுவன கூடி சொற்பம் கலந்தி

* ஆத்ம போஷணையைக் கைவிடுதலால்.

ருக்கின்றன. அதைச் சுடவைத்து விட்டால் அதிலுள்ள அசுத்தங்கள் நீங்குவதோடுகூட சரீரத்தைப் போஷிக்கத் தக்கவைகளாக இருப்பவையும் நீக்கப்படுகின்றன. ஆனால் சுத்தஜலத்தில் அசுத்தங்கள் கலந்திருக்கக் கூடும். இத்தகைய பேதங்களைத் தவிர சுத்த ஜலமும் வெந்நீரும் நல்ல பான சாதனங்களேயாகும். ஆனால் அவைகளை உபயோகப் படுத்துவதில் கவனிக்க வேண்டுவதொன்றுண்டு. அதாவது குளிர்ந்த ஜலம் அதிகமாகக் குளிர்ந்திருக்கும் பொழுதோ, வெந்நீர் அதிகமாக உஷ்ணமாயிருக்கும் பொழுதோ குடித்தல் சாதாரணமாக ஆரோக்கிய நிலையைப் பேதப்படுத்தத் தக்கது.

சரீர போஷணைக்கும் அதன் ஆரோக்கிய நிலக்கும் பிருதிவி அம்சத்தைப்போல ஜல அம்சமும் ஒரு வேளை அதைப் பார்க்கிலும் அதிக முக்கியமானதென்று ஜனங்களுக்கு சாதாரணமாகத் தெரிகிறதில்லை. பிருதிவி அம்சம் ஆகாநின்ற உணவுகள் தாம் மிகவும் முக்கியமானவை யென்று சாதாரணமாக எண்ணி ஜலத்தை அசட்டை செய்ய தங்கள் ரோகங்களைச் சம்பாதித்துக் கொள்ளுவதும் தவிர தங்கள் குழந்தைகளையும் அவ்விதமாகவே வளர்க்கிறார்கள். அடிக்கடி ரோகங்கள் உண்டாகும்பொழுது மாத்திரம் கவலைப்படுகிறார்கள். அவ்ரோகங்களை நிவிர்த்தி செய்ய வரும் டாக்டர்களோ வியாதியஸ்தனுடைய சரித்திரத்தைக் கேட்கவோ, அவனுடைய ஆகாராதிகளின் கிரமங்களையோ பழக்கங்களையோ தெரிந்து கொள்ளவோ, அவைகளில் ஏதேனும் ஆரோக்கிய நிலை வகிப்பதற்கு விபரீதமானபழக்கங்கள் இருப்பின் அதைநீக்குவதற்கு உபதேசிக்கவும் பழகவேண்டியமாதிரியைப்போதிக்கவும் செய்யவோமுயலாமல் தற்காலம் ரோகத்தின் சின்னங்களை அடக்கிவைத்தோ அல்லது வேறொரு வியாதியை வேண்டுமென்று உண்டுபண்ணுவதால் அச்சின்னங்கள் தாமே அடங்கவோ செய்து தங்களுக்குள்ளகாசை கைமேல் வாங்கிக்கொண்டுபோய் விடுகிறார்கள்.

[இன்னும் வரும்.]

வள்ளிநாயகம்.

சிந்தாமணி சரித்திரம்.

வெண்பா.

மாமலருட் டோய்மணமாய் மன்னுயிர்கட் கோருயிராய்த்
தூமமகன் றேதிகழுஞ் சோதியுடாய்—நாமமொடு
பல்லுருவு மாய்ப்பெருகிப் பற்றியம ரோர்பொருளைச்
சொல்லிமகிழ் வார்நந் துணை.

ஆதவ னுதயமாயினன். அவனுடைய கிரணங்களாகிய துடைப்பங்களங்குமிங்கு முலவி யிருளென்னுஞ் சருந்தூளிகளை யகற்றி விசும்பை விளக்கிற்று. தூய்மை நிறையும் மந்திரவாதியைக் கண்டபேய்போல இரவென்னும் மடந்தை பருதி முன்னர் நிற்க முடியாமல் நாணி நலிந்து உருவழிந்து மறைந்தனள். கீழ்மக்களி னுறவுகொண்டு வாழ்வுற்று மகிழ்ந்து பின்னர் சோர்வடையும் மதியிலர்போ லிரவின்கண் மலர்ந்து செருக்குற்ற குவளை மலர்கள் அந்தோ வாடி நோவுற்றன. குணமுளார்க்கும் நேர்ந்து விலகும் துர்ப்பாக்கியம் போலக் கங்குலொழியவும் தங்கணாயகனாகிய சூரியனுடைய முகம் நோக்கிக் கமல மலர்கள் விகசித்து மகிழ்வுடன் பிரகாசித்தன. இரவிற் கண் துஞ்சி வைகறையில் தாயைக் கூவி விழிக்கும் மதலைகள் போன்று அர்தணர்களின் வாயால் நான்கு வேதங்களும் உதிக்கின்ற சூரியதேவனைப் புகழ்ந்து பாடத்தொடங்கின. மகிச்சிழ்யுடன் இனிமையான குரலொலித்துக் கூவுங் குயில்களும் விடியற்காலத்தைப் புகழ்ந்து பேசுவன போலக் குலாவி உலவும் கிள்ளைகளும் தங்களினிய மொழிகளால் எல்லோரையு மானந்தத்தில் முழுக்காட்டி வைத்தன. புனிதம் நிறைந்த பிராமணர்கள் புண்ணிய தீர்த்தமாகிய அந்த மலையருவியின் மீது ஸ்நானம் செய்து நித்திய நைமித்திக விதிகளை யனுஷ்டித்து விளங்கினார்கள். உதைய வேளையானது ஞாலத்தின்கண்ணுள்ள சகல சராசரங்களையும் அலங்கரித்து அழகு வாய்ந்து மகிழ்வுறப் புரியினும் ப்ராணிகளனைவர்களும் சந்தோஷிக்கின்றார்களா? 'தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்' என்னும் விதிப்படி தேகிகள் முன் புரிந்த புண்ணிய பாபத்துக் கநுசரணையாய் சுகிகளாகவும் துக்கிகளாகவும் பேதமுற்று நிற்கின்றார்கள். அவ்விடத்து ஒரு சிறிய பெண் உடல்வாடி வருத்தமுற்றுத் தன்னந் தனியாகக் கால்சோர நடந்து வருந்தினள். அவள் மனத்துள் நிறையும் கவலையனைத்தையும் வாடிய மலர்போன்ற அவள் முகம் விளம்பிற்று. கட்டவிழ்ந்து சிதறிக்கிடக்கும் அவளழகிய கூந்தலானது அந்த மார

க்கடவுளுடைய அரசியலே அநாயகமாய்க் குலைவுற்றதோவென்றையம் உணர்த்தலாயிற்று. அவளிரு விழிகளிலும் பெருகி வழியும் கண்ணீருடன் முகம் வாடிவருவதை நோக்கி இரதிதேவியானவள் கடிய கோபத்தால் நன்காராய்தலின்றி தன்கணவனாகிய மாரனையெரித்துப் பின்னர்பாதகத்துக்கஞ்சி இத்திருக்குற்றாலத்தில்வந்தொளித்துக்கொண்டிருக்கும் கண்ணுதலுடன் வாதாடிப் பழிவாங்கவருகின்றாளோவெனச் சந்தேகிக்கலாம்.

இம்மின்னற்கொடிக்கு வயது பதினெட்டிருக்கும். அவளழகு மிலாவண்ணியமுமொப்பற்றன. அவள் அங்கிருக்கும் தேவாலயத்துக்குச் சமீபத்தில் வந்துகொண்டிருந்தாள். அங்கு அவ்வாலயத்தின் முன்மண்டபத்தில் பாலியவயதுள்ள இரண்டுபேர்கள் பல் விளக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களிலொருவன் பிராமணன். மற்றொருவன் வேளான்குலத்திற் பிறந்தவன். வயதுமுதிர்ந்த அந்தணரொருவர் நித்தியகருமத்தைமுடித்துவிட்டு அங்கொருபக்கத்தில் தியானஞ்செய்துகொண்டு வீற்றிருந்தார். ஆலயத்தின் பிரகாரத்தில் விருத்தாப்பியம்நிறைந்த ஒருமறையவரும் சீலம்பொருந்திய அவன் மனைவியும் கோவிலைப் பிரதட்சணம் செய்துகொண்டுவந்தனர். அக்காலையில் அந்தப்புண்ணியவதி தன் கொழுநனை நோக்கி.

“தேவ அம்பிகையின் அருளை என்னென்று சொல்வேன்? நமது பசு ஓடிப்போய் இன்னவிடம் சென்றதென்று அறிய முடியாமலிருந்ததே. இன்று சுக்கிரவாரமாக விருந்தும் அம்பிகைக்கு நிவேதனம் செய்வதற்கு எவ்விதம் பாயசம் சமைக்கிறதென்று மிகவும் சிந்தனைப்பட்டுக்கொண்டிருந்தேன். அகோ! என்ன ஆச்சரியம்! நாலு நாளாக ஓடிப்போயிருந்த பசு இன்று விடிய விரண்டு நாழிகைக்கு முன் வந்து குதித்ததே. அது மட்டுமன்று. வழக்கத்துக்குமேல் கால்படிபால் அதிகமாகக்கொடுத்ததே, நமது சங்கரன் நிரம்பச்சக்கரையும் அவனாகவே வாங்கிவந்தான் பாயசமும் மிகவும் நேர்த்தியாய் அமைந்திருக்கின்றது” என்றுரைத்தாள். இதுகேட்டு அந்தணன்.

“நீ ஒன்றுமறியாதவளா உண்மையான பக்தியிருந்தால் எதுதான் நடவாது; ஓடிப்போனபசுமட்டுமோவரும், வெகுதூரஞ்சென்றவர்களையும் சடுதியில் அருகில் கொண்டுவந்துசேர்க்குமே.” என்றுசொன்னான்.

இவ்வசனங்கள் அங்கு வந்துகொண்டிருந்த இளமடமயில்காதில் விழுந்தன. மறையவன் கடைசியில் மொழிந்தவாக்கியத்தை அம்மடக்கொடி கேட்டவுடன் மேனி புளகித்துப் பெருகும் கண்ணீருடன் அம்மறையவன் அருகில் நின்றாள். அவன் அவளை நோக்கி

"அம்ம, நீர்யார்? குற்றமற்றவடிவத்தால் சாட்சாத் மகேசுவரிபோல் விளங்குகின்றீரே ஆனால் மிக்க மனக்குறையுற்றவள்போல முகவாட்ட முற்றும் கண்ணீர் விடுகின்றீர் நீர் எவ்விடம் நின்றுவருகின்றீர்" என்று வினவினன். அதுகேட்டு அம்மாதுசிரோமணி

"ஐய, தங்கள் அளவில்லாக்கருணைக்கு ஆயிரம் வந்தனம். நான் இரப்போர்க்குக்குறைவின்றியளித்து வாழ்ந்த ஒரு பெருமான் வயிற்றிற் பிறந்தேன். நான் வைசியஜாதிப்பெண். நான் பிறர்கட்குப்பசிநோவின்றி அமுதளித்தகாலம் சென்று இந்நாள் கொடியபசிக்காளாயினேன். யான் உணவுண்டு மூன்று தினங்களாயின. நிற்கவும் பேசவும், சக்தியற்ற வளாயிருக்கின்றேன். இரப்பு இன்னதென்றரியாதவெனக்கு உணவையா சிக்கவேண்டிய சமயம்நேர்ந்தது பரமேசுவரன்செயல்" என்றுசொல்லி அதற்குமேல் வசனிக்கமுடியாமல் அங்கிருந்த ஸ்தம்பத்தின்மீது சாய்ந்து கொண்டு மயக்கத்துடன் உட்கார்ந்தாள். அதுகண்டு அம்மறையவன் பற பறப்புமேலாகித் தன்னுயகியைப்பார்த்து

"அடியே, சீக்கிரமாக ஆலயத்துட் சென்று உன் கையி லிருக்கும் பாயசத்தை மனோன்மணிக்கு அர்ப்பணஞ்செய்து பின்னர் அதை இப்பெண் குயிலுக்கு ஆகாரமாகக்கொடுப்போம்" என்றான். அது கேட்ட அம் மடந்தை நாயகனைப் பார்த்து

"தேவா இஃது என்ன கொடுமை? பசியால் மயக்க முற்று நமது முன்னர் இம்மடக்கொடி வாடி நிற்கையில் இப்பாயசத்தை உடனே அவளுக்கு விநியோகித்து அவள் களைப்பை யாற்றாமல் அதை அம்பிகைக்கு அர்ப்பணம் செய்து எப்பொழுது நாமிங்கு வருவது. நான் இன்று சமைத்த பாயசத்தின் ரசத்தை நன்கு அறிய அம்பிகையே இப்பெண்ணுருவாய் வந்திருக்கிறளென்று நினைக்கிறேன். மேலும் பசியுளார்க்கு அளிக்கும் அன்னத்தால் ஈசுவரனே திருப்தியடைகிறனென்பது ஆன்றோர் வசனமல்லவா? இம்மட வன்னத்தை நான் கண்ணுற்ற நேரமே என் மன முருகி அளவில்லா ஆனந்தக் களிப்பை அடைந்தது. ஐயோ! எந்தச் சீமான் மகளோ? எப்புனிதனுடன் வாழப்பெற்றவளோ? இப்பாயசத்தை உடனே அவளுக்கு ஊட்டுகிறேன்" என்றுரைத்தவுடன் அவள் நாயகன் தன்னுணர்வுக்கு வராத சமரச புத்தி தன் மனைவிக்கு தோன்றியதைப்பற்றி மிகக் களிப்புடன் ஆமோதித்துக் கூறுகின்றான்.

(இன்னும்வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

ஹெலெநாம்பாள்.

[முன் தொடர்ச்சி]

"அரியவற்று ளேல்லா மரிதே பேரியாரைப்
பேணித்தமராக்கோளல்."

அப்பால் இவர்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் பிரயாணந் தொடங்கிப் போகும் வழியில் ஒரு ஸ்தலத்தில் குதிரைகள் மாற்றுவதற்காகப் பார்த்தபொழுது அந்த ஸ்தல அதிகாரி (Station master) மிகவும் முறட்டுத்தனமாய் வேறு குதிரைகள் கிடையாவென்றும் வேண்டுமானல் காத்திருக்க வேண்டும் என்றும் சொல்லினன். சூரியனின்னும் அஸ்தமன்மாகவில்லை. அன்றையதினம் பூரண சந்திரன் உதயகாலம். ரோட்டு (Road) களோ மிக நல்லவை. இப்படியெல்லா மிருந்தும் அந்த ஸ்தல அதிகாரியின் மூர்க்கத் தன்மையினல் இவர்கள் அனேக நாழிகைகள் வீணுய்க் கழிக்கவேண்டி யிருந்தது. இது அவர்களுக்கு மிகுந்த கோபத்தை மூட்டிற்று. ஆனபோதிலும் அவர்கள் செய்வதற் கொன்றுமில்லை. நியாயம் பேசி இணங்கும்படி செய்வதற்கு வழியின்றிக் குடித்து வெறிமீறியிருந்த அந்த ஸ்தல அகிகாரி மறைந்து கொண்டான். சொல்லியனுப்பியும் இவர்களிடம் வந்து பேசமாட்டேன் என்றுகூறிவிட்டான். ஆகையால் உண்டான சங்கடத்தைக் கூடியமட்டும் பொறுத்துக்கொண்டு இரவு அங்கேயே தங்கிவிடத் தீர்மானித்துக் கொண்டார்கள். ஆனல் இதற்கும் ஒரு தடை ஏற்பட்டுவிட்டது. அந்தச் சிறு ஸ்தலத்தில் பிரயாணிகளுக்கென்று ஒரு அறை மாத்திரம் காங்கையும் கசுமாலமும் நிறைந்த மடைப்பள்ளியை யடுத்துள்ளது. அந்த ஒரு அறையும் பூட்டித் தாளிடப்பட்டிருந்தது. வேலையாட்கள் அதிகாரியின் உத்தரவில்லாமல் அந்த அறையைத் திறக்கமாட்டோம், என்று சொல்லிவிட்டனர். ஹேலேநாம்பாளின் பொறுமை இப்பொழுது நீங்க ஆரம்பமாய்விட்டது.

"வெகு நேர்த்தி வெகு நன்றா யிருக்கின்றது. குதிரைகள் இல்லையென்று நமக்கு மறுக்கிறார்கள். நமக்குரித்தாய அறையும் உள்ளே போகக்கூடாமல் பூட்டப்பட்டிருக்கின்றது. அது ஏன் மூடியிருக்கின்றது? அது எனக்குத் தெரியவேண்டும். அதைச் சொல்லியே தீரவேண்டும். நான் கண்டித்துக் கேட்கிறேன்" என்று அவள் சொல்லிக்கொண் டிருந்தாள். ஆனால் அவள் கேள்விக்கு விடையளிப்பவர்கள் அவ்விடத்திலொருவருமில்லை. வேலையாட்களும் ஓடிப்போய்விட்டார்கள். எங்குப் பார்த்தாலும் ஒரு பிராணிகூடக் காணக் கிடைக்கவில்லை. ஹேலேநாம்பாள் இப்படிச் சொல்லிக்கொண்டே பூட்டியிருக்கும் அறைக்குள் ஜன்னல் வழியாய்ப் பார்த்து "ஆஹா! இப்படியா யிருக்கின்றது! நல்லதிருக்கட்டும். இப்பொழுது அந்த வெறி மயக்கங் கொண்ட மிருகத்தை ஐந்து நிமிஷத்தில் நமக்குக் குதிரைகள் கொடுக்கும்படி செய்கிறேன் பார் என்று சொல்லிக்கொண்டு அந்த ஸ்தல அதிகாரியைத் தேடி நடந்து விட்டாள். அந்த அந்தரங்கமான அறைக்குள் என்ன இரகசிய மிருக்குமோ வென்று தெரிந்துகொள்ள ஆவலுள்ளவளாய் அவள் தங்கை ஜன்னல் அருகிற் சென்று உள்ளே பார்த்தாள். அவள் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆயினும் அவளுக்கு மிகவும் வியப்பும் சந்தோஷமும் உண்டாகும்படி பத்து நிமிஷத்திற்குள் அந்த ஸ்தல அதிகாரி வெளுத்துத் திகிலடைந்து ஓடிவந்து முன் காட்டிய மூர்க்கத்தனத்தையெல்லாம் முற்றுந் துறந்து மிகவும் பயபக்தியுடன் மூன்று அருமையான உரத்த அஞ்சற் குதிரைகள் கொண்டுவந்து வண்டிக்குப் பூட்டி அவர்களைப் பயணப்படுத்தி விட்டான். ஹேலேநாம்பாள் தங்கை அந்தக் குடிகார அதிகாரியை என்ன மந்திரத்தினால் அவ்வளவு பயபக்தி யுள்ளவனாக மாற்றினாய் என்று கேட்டதற்கு ஹேலேநாம்பாள் சும்மா சிரித்துக் "கேள்விகள் ஒன்றும் கேளாதே. பலனை மாத்திரம் அனுபவி. உனக்கென்னத்திற் கவ்வளவு ஆத்திரம்?" என்று சொல்லி விட்டனள். மறுதினந்தான் அந்த அதிகாரியின் நடத்தை மாறினதற்குக் காரணம் அவள் தங்கைக்குத் தயவுசெய்து கூறினள்.

அந்த அறைக்குள் அந்த அதிகாரியின் இறந்துபோன மனைவியின் உயிர் இன்னும் உலாவிக் கொண்டிருப்பதாயும் குதிரைகள் கொண்டுவந்து வண்டி பூட்டித் தங்களை யனுப்பி விடாவிட்டால் தாங்கள் பலவந்தமாய் அந்த அறைக்குள் செல்ல வேண்டி நேரிடும் என்றும் அப்படிச் செய்யும்பொழுது அந்த உயிர் மிகவும் கஷ்டப்படும் என்றும் சொல்லி அவன் சற்று முந்தித் தான் அவ்வறையிற் போட்டு வைத்திருந்து அப்பால் இடுகாட்டில் புதைத்து விட்டு வந்த அவன் மனைவியின் ரூபததை மிகவும் நுண்மையாய் அவனுக்கு வர்ணித்துச் சொன்னதாகவும் அதன் மேல் அவன் திடுக்கிட்டுப் பயந்து தன்னை ஒரு பெரிய மாந்திரீக வாதியாகக் கருதி விரைந்து ஓடிப்போய்க் குதிரைகள் கொண்டு வந்ததாகவும் ஹெலெநாம்பாள் சொல்லினள்.

சில காலத்திற்கப்பால் ஹெலேநாம்பாள் அலேக்ஸாண்ட்ரியா என்னும பட்டணத்திற்குச் சென்றனள். அந்நகரத்தில் இப்பொழுது சாதாரணமாய் ஹோட்டல் (Hotel) என்று வழங்கும் ஒரு சத்திரத்தில் தங்கி யிருந்தனள். அக்காலத்தில் ஒரு பிரபு அவளை அச்சத்திரத்தில் சில சினேகிதர்களுடன் சந்தித்தனர். அப்பிரபுவின் பெயர் அவர் அனுமதி யில்லாததால் பகிரங்கமாய்ச் சரித்திரத்தில வெளியிடப்படவில்லை. ஆனால் அவர் நாமத்தின் முதலெழுத்து 'ந' என்று குறித்திருக்கின்றது. ஒரு நாள் அந்நகரத்தில் நாடகம் ஒன்று நடிப்பதைப் பார்க்க அவர் சினேகிதர்கள் எல்லாம் நாடகசாலைக்குச் செல்ல இவர் மாத்திரம் போகாமல் சத்திரத்திலேயே தங்கி ஒரு சோபா (Sofa) வில் உட்கார்ந்து கொண்டு ஹெலேநாம்பா ளுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது சோபாவிற்கு முன்னால் டீபாய் (Tea poy) என்னும் ஒரு சிறிய மேஜையின் மேல் இந்த பிரபுவுக்காக அவர் வேலைக்காரன் ஒரு புட்டி சாராயமும், சொற்பம்

கொடிமுந்திரிச் சாராயமும், ஒரு " டம்ளரும் " (Tumbler) இன்னும் ஒரு வோயின் கிளாஸ் (Wine glass) என்னும் மதுபான பாத்திரமும் வைத்துவிட்டுப்போயினன். அந்தப் பிரபு மதுபான பாத்திரத்தில் மது நிரப்பி அதை யெடுத்து வாயினிடம் கொண்டு போகவும் ஒரு காரணமுமில்லாமலே அந்தப் பாத்திரம் துண்டு துண்டாய் அவர் கையிலேயே உடைந்து போய்விட்டது. மது கீழே சிந்திப்போயிற்று. ஹேலேநாம்பாள் அதிக மகிழ்ச்சி யடைந்தவள் போல் சிரித்துத் தனக்குச் சாராயம் என்றால் வெகு வெறுப்பென்றும் மது சாப்பிடுகிறவர்கள் தன்னிடம் வருவதாவது இருப்பதாவது தனக்குச் சகிக்க முடிகிறதில்லை யென்றும் கூறினள். அதன்மேல் அப்பிரபு "அந்த மதுபானபாத்திரத்தை உடைத்தவள் நீயென்று அனுமானிக்கும்படி பேசுகிறாய் போலும்.........அது ஒரு அகஸ்மாத்துத்தானே.........அந்தக் கண்ணாடி மிகவும் இலேசானது; ஒரு வேளை அது முன்னமேயே விட்டிருக்கும். நான் பலமாய் அழுத்திப் பிடித்திருப்பேனோ என்னவோ" வென்று சொல்லினர். இவ்விடத்தில் அவர் மேலும் சொல்லுகிறார் " நான் வேண்டுமென்றே பொய் சொல்லினேன். அந்தப் பாத்திரம் வஸ்தவத்தில் மிகவும் கனமாயும் பலமாயும் இருந்தது. ஆகையால் அது வெடித்து உடைந்து போனது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை யுண்டு பண்ணிற்று. ஆனால் நான் அவளை வெளியில் இழுத்து அவள் வாயினாலே தெரிந்து கொள்ள வேண்டுமென்று அப்படிச் சொன்னேன். அப்பால் அவள் என்னைக் குருகுரு வென்று பார்க்க அவள் கண்கள் பளபள வென்று மின்னின. நான் மறுபடியும் அப்படியே செய்யமாட்டேன் என்று என்ன பந்தயம் வைக்கிறாய் ?" என்றனள். " நல்லது. இப்பொழுதே பார்க்கலாம். நீ அப்படி மறுபடியும் செய்வாயானால் நீ உண்மையான மாந்திரீகவாதி யென்று நானே முதலில் சொல்லுவேன். நீ தவறினால்

நாளைக்கு உன்னையும் உன்னுடைய தேவதைகளையும் பார்த்து ஊரில் நன்ருய்ச் சிரிப்போம்? என்று சொல்லிக்கொண்டே ஒரு "டம்ளரில்" (Tumbler) பாதி சாராயம் விட்டு நிரப்பி அதைக் குடிக்கப்போனேன். அந்தக் கண்ணாடி டம்ளர் என்னு தட்டிடம் போனதும் அது என் கையிலேயே துண்டு துண்டாய் அதிர்ந்து வெடித்தது ஒரு கண்ணாடித்துண்டு என் கையில் பொத்து இரத்தம் வந்து விட்டது! அப்புறம் அவள் என் முகத்தைப் பார்த்து கள கள வென்று உரத்துச் சிரித்து விட்டு அந்த அறையை விட்டு நீங்கினள்.'

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

மனிதனது எழுகூறு.

[முன் தொடர்ச்சி.]

இனி நாம் எல்லா ஜென்மங்களுக்கும் ஒப்பனையாயிருக்கும் படியாக ஒரு ஜன்மத்தை யெடுத்துக்கொண்டு அதில் மனசு என்னும் நான் அல்லது ஜீவாத்மா என்ன செய்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும். இந்த நான் முன் ஜன்மங்களில் இந்தப் பூவுலக வாழ்வில் செய்து விடுத்த காரணங்களாகிய கர்மத்தால் தனக்கு க்ஷேத்திரமாக உதவத்தகும் மனிதன் பிறக்கப்போகும் குடும்பத்திற்கு வலிந்திழுக்கப்பட்டிருக்குந் தருணத்திலிருந்து நாம் முதல் ஆரம்பிக்கலாம். இப்பொழுது இந்த நான்தான் இனி வசிக்க வேண்டிய தேகாலயம் கருப்பாசயத்தில் கட்டப்படும் பொழுது காத்திருக்கின்ருன். அப்பொழுது ஒரு கஷ்டம் தோன்றுகின்றது. இந்த நான் பரவஸ்து. அவனுடைய வாசஸ்தானமானது இந்த ஸ்தூல பிரபஞ்சத்தைப் பார்க்கிலும் அதிக உன்னதமான மூன்ருவது தலமாகிய தேயு தலமென்று சொல்லும் மனோ தலமும் அதற்கு மேலாகிய தலங்களுமாம். அவனுடைய தத்துவமோ மிகவும் சூக்ஷ்மமானது. ஆகையால் தன் அதி சூக்ஷ்மமாகிய தத்துவ அணுக்களைத்தனக்கு வாசஸ்தலமாக ஏற்படப் போகிற

தேகாலயம் கட்டப்படும் ஸ்தூல தத்துவ அணுக்களின் மேல் நேராகத் தாக்கி விளையாடி அவைகளைப் பிரேரிக்க அவனுக்கு முடியாது ஆதலால் அவன் தன்னுடைய தத்துவத்தில் சில பாகத்தைத் துருத்தி நீட்டுகின்றான். அப்பொழுது அந்தப்பாகம் இரண்டாவது தல தத்துவமாகிய அப்பு தத்துவப் போர்வையைப் போர்த்திக்கொண்டு அப்பால் முதல் தலத்ததாகிய பிருதிவி தத்துவத்தில் நுண் கூறாகிய நுண்பூத வஸ்துவின் உதவியைப்பற்றி இன்னும் பிறவாமல் கருப்பத்திலேயே யிருக்கும் சிசுவின் நரம்பு மண்டல முழுதும் ஊடுருவிப்பாய்ந்து கலக்கின்றது. இதுதான் பின்னால் ஸ்தூல தேகமாகிய கருவி வளர்ந்து முதிர்ச்சி யடையும் பொழுது மனிதனிடத்துப் பகுத்தறியும் தத்துவமாகின்றது. மனசிலிருந்து புறப்பட்ட இந்தப் பிதுக்கத்திற்கு நிழல், சாயை, சிதாபாசன், பிரதிபிம்பம், சீவன், உட்காணம், அந்தக்கரணம், மனக்காந்தி, மனக்கதிர், கிரணம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், சுத்தாசுத்த மனசு, வியாவகாரிகசீவன், சிற்றறிவு, கிஞ்சிஞ்ஞன், கிஞ்சிக்ஞன், கீழ்மனசு, ஊனமனசு, டோலிமனசு, என்றும் இன்னும் பலவிதமான பெயர் வைத்தும் சொல்லுவார்கள். ஒவ்வொரு ஜன்மத்திலும் மனசு துவிதமா யிருக்கிறபடியால் இவ்விரண்டு பாகத்திற்கும் வித்தியாசம் காண்பிக்க ஒன்றைக் கீழ்மனசு, தாழ்ந்தமனசு, சிற்றறிவு, வியாவகாரிகஜீவன், வியாவகாரிகஜீவாத்துமா, ஜீவன், விஷயீ, கர்த்தன், ஞானம், என்றும் மற்றையதை முறையே மேல்மனசு, உயர்மனசு, பேரறிவு, பாரமார்த்திக ஜீவன், பாரமார்த்திக ஜீவாத்துமா, ஈசன்; சாக்ஷி, அகர்த்தன், விஞ்ஞானம், என்றும் சொல்லுவார்கள். ஞானத் திறவு கோல் என்னும் நூலில் ஹெலேநாம்பாள் இதைப்பற்றிக் கூறுவதாவது:— "பந்தப்பட்ட வுடனே அதாவது ஜனமத்திற்கு வந்ததும் அவர்கள் (மனசுகள்) உடைய சத்து அல்லது சுபாவம், துவிதமாய் விடுகின்றது; அதாவது தனித்தனி பிரிந்து வேறாக உள்ள பொருள்களாகக் கருதும்படியான நித்திய சுத்த தெய்வ மனஸ் ஸின் கதிர்கள் உபய குணம் கைக்கொள்ளுகின்றன. ஒன்று அவைகளின் உண்மைச் சுயசுபாவமான குணம், அது பரநாட்டமுள்ள மனம் (உயர்மனசு;) மற்றொன்று மனித குணமாகிய அறிதல், எண்ணுதல், நினைத்தல் செய்யும் சுபாவம், அதாவது மனிதனுடைய மூளையின் மேம்பாட்டினால் பகுத்தறியும் பக்குவமடைந்த மிருகவறிவு, காமநாட்ட மனம், அதாவது கீழ் நோக்கிய மனம் அல்லது தாழ்ந்தமனசு."

இந்த மனசைப்பற்றிக் கைவல்லியநவநீதத்தில் அடியில்வருமாறு சொல்லியிருப்பதை உய்த்துணர்க.

"இந்தியங்களுக்கிராச னிதயமாமதினெண்ணங்கள்
புந்தியுமனமுமென்றே புறத்தகத்துலாவியாடும்.'

(இந்தியங்கள் - இந்திரியங்கள் புலன்கள். இசயம் - மனசு. எண்ணங்கள் - விருத்திகள், நினைப்புக்கள். இம்மனோவிருத்திகள்மனம் புத்தியென்னும் இருவிதப்பரிணாமமுடைய அந்தக்கரணத்தின்வழித்தாய் உள்ளும் புறமும் விளையாடும்.)

"உன்முகம் போற்கண்ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போல் புத்தி தோன்றும்
நின்மனோ விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவும்
தன்மகன் மகனே இத்தைத் தானன்றோ ஞான மென்பார்."

(சின்மயவடிவு - மனசு, கூடஸ்தன். சாயை - நிழல். கதிர், பிரதிபிம்பம், மனசின் பிதுக்கம் ஞானம் - கீழ்மனசு. புத்தி - அந்தக்கரணம். சாயை விழும்உபாதி - மனசினின்று புறப்படும் பிதுக்கத்தின் போர்வை.)

"உருக்கிய தராநீர் நாநா வுருவங்க ளானாற் போல
விருத்திகள் கடபடாதி விஷயமாய்ப் பரிண மிக்கும்
அருப்பல விஷய மெல்லா மாபாசன் றோற்று விக்கும்.
இருட்டினில் விளக்கும் கண்ணும் இல்லாமற் பொருள்கா ணாதே."

(ஆபாசன் - சிதாபாசன். அசாவது:—அந்தக்கரணமாகிய உபாதியும் அதிற் பிரதிபலித்த சித்தின் பிரகாசமும். அல்லது கதிரும் கூடியது.)

"எரிகின்ற விளக்காற் கண்ணா விருட்பொருள் காணல் வேண்டும்
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற ஜகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும் [கே
புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்

(பலம் - சிதாபாசம், சித்தின் பிரதிபலம். அல்லது பிரதிபிம்பம்.)

"விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென்பார்கள்
... ..."

(மனம் - சிற்றறிவு, கிஞ்சிஞ்ஞன், தாழ்ந்த மனசு.)

"அச்சு வத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள் வாழும்
நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத் தின்னும்
மெச்சு மங்கொரு பறவைதின் னாதென வியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவாயே."

(இச்செய்யுளில் சீவன் என்பது கீழ்மனசு; ஈசன் என்பது மேல்மனசு. அப்பால் கீழ்மனசு மேல்மனசுடன் சேர்ந்து ஒன்றாகும்பொழுது சீவன் என்பது ஏகமனசும், ஈசன் என்பது ஆத்மாவுமாய் நிற்கும். இப்படியே படிப்படியாய்ச்செல்லும்.)

இப்பொழுது நாம் இந்தத் தாழ்ந்த மனசாகிய அந்தக்கரணத்தின்மேல் மாத்திரம் தனியாய்க் கவனத்தைச் செலுத்தி அது மனிதக்கட்டில் விளையாடும் கூத்தைப் பார்ப்போம். இனித் தாழ்ந்த மனசைப்பற்றிப் பேசும்பொழுது சாதாரணமாய் **அந்தக்காணம்** அல்லது **வியாவகாரிக ஜீவன்** என்றும் அல்லது சும்மா **மனசு** என்றும், உயர்ந்த மனசை **விஞ்ஞானம்** அல்லது **விஞ்ஞானி**, அல்லது **பாரமார்த்திக ஜீவன்** என்றும் சொல்லி வருவாம்.

இந்த வியாவகாரிக ஜீவனானவன் சதுஷ்கமாகிய ஆணவத்தில் ஆழ்ந்து முழுகிப்போயிருக்கின்றான். அவன் ஒரு கையினால் ஒரு பக்கம் **காம**த்தைச் சமுவிப் பிடித்துக்கொண்டும் மற்றொரு கையினால் தன் பிதாவாகிய **விஞ்ஞானி**யின் பிடிப்பை விடாமல் பற்றிக்கொண்டும் இருப்பதாக நாம் கருதிக்கொள்ளலாம். இவன் **காமத்தினால்** முற்றிலும் கீழே இழுக்கப்பட்டுத் தன் சுயசொரூபத்தினால் தனக்குரிய **ஆத்துமா புத்தி மனசு** என்னும் திரயத்தினின்றும் கிழிந்து பிரிந்து துண்டித்துப் போவானோ அல்லது இவன் தன் பூலோக வாழ்வின் அனுபவங்களைப் புனிதப்படுத்திக்கொண்டு அந்தச் சாத்வீகானுபவங்களை வெற்றியுடன் தன்னுடைய மூலஸ்தானத்திற்குக் கொண்டு செல்லுவனோ? என்பதுதான் ஒவ்வொரு ஜன்மத்திலும் தீர்மானிக்க வேண்டியதாக விருக்கின்றது. மண்ணுலகத்தில் வாழும்பொழுது **காமமும் அந்தக்கரணமும்** ஒன்று சேர்ந்திருக்கின்றன. ஆகையால் பிரமஞான சங்க நூல்களில் பூலோகத்தில் உயிருடனிருக்கும்பொழுது சேஷ்டிக்கும் சீவனை இசைவாய் இவை இரண்டையும் பொருத்திக் **காமமனசு** என்று அடிக்கடி சொல்லுவார்கள். நாம் முன்னமே கண்டபடி மிருகங்களுக்குப் பொதுவாயுள்ள பசி தாக முதலிய உணர்ச்சிகளையும் காமக் குரோதாதி உணர்ச்சிகளையும் **காமம்** கொடுக்கின்றது. **அந்தக்கரணம்** அவைகளைப் பகுத்தறிந்து அப்பால் விசாரித்தல், யூகித்தல், அநுமானித்தல், தருக்கித்தல், நியாயித்தல், காரணகாரிய சம்பந்தத்தொடர்பறிதல் முதலிய மனோசக்திகளையும் கூட்டுகின்றது; இப்படித்தான் நமக்கு மூளை மனது, மூளையறிவு, மூளைப்பிரஞ்ஞை அதாவது நாம் விழித்துள்ள பொழுது நமக்கிருக்கும் ஞானம், ஜாக்கிராவஸ்தை ஞானம் கிடைக்கின்றது; அதாவது இம்மண்ணுலகத்தில் ஸ்தூலதேகத்தைத் தனக்குக் கருவியாக வைத்துக்கொண்டு அத்தேகத்திலுள்ள மூளையிலும் நரம்பு

மண்டலத்திலும் காமமனசு தொழில் செய்வதுதான் ஜாக்கிராவஸ்தையென்று சொல்வது. மனிதன் உயிருடனிருக்கும் பொழுது காமம், மனசு என்னும் இவ்விரண்டு தத்துவங்களும் ஒன்றுக்குள்ளொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன. அவைகளை வெவ்வேறாய்த் தனித்தனியாய்த்தொழில் செய்வதில்லை. அவைகள் அப்படித்தொழில் செய்வது மிகவும் அருமை. ஆனால் இந்தக் காமமனசு என்பது ஒரு புது தத்துவமன்று. அது நான்காவது கூறு ஐந்தாவது கூறின் கீழ்ப்பாகத்துடன் பின்னி இழைத்துக் கொண்டிருப்பதே யென்று மாணாக்கன் தெளிவாய் அறியவேண்டியது.

ஒரு சுடரினால் ஒரு தீபத்தின் வர்த்தியை நாம் கொளுத்தி விளக்கேற்றுவது போலும் அப்பால் எரியுந்திரியின் சுடரினுடைய பிரகாசமும் நிறமும் அந்தத்திரியின் சுபாவத்தையும் குணத்தையும் அந்தத் திரியை எந்தத்தயிலத்தில் துவைக்கப்பட்டிருக்கின்றதோ அந்தத் தயிலத்தின் சுபாவத்தையும் குணத்தையும் எப்படிப் பொறுத்திருக்கின்றனவோ அது போல ஒவ்வொரு மனிதப் பிராணியிடத்தும் மனசு என்னும் அறிவு ஆகிய சுடர் மூளை, காமம் என்னும் திரியைக் கொளுத்திப் பிரகாசப்படுத்துகின்றது. இந்த மூளை காமம் என்னுந் திரியினின்றும் வரும் வெளிச்சத்தின் நிறம் காமசுபாவத்தையும் மூளையாகிய கருவியின் பக்குவ முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் பொறுத்திருக்கின்றது. காமசுபாவமானது வெகு பலமுள்ளதாகவும் பயிற்சிக்குள் வந்து ஒழுங்கு படாமலுமிருந்தால் சுத்தத் தெளிவான அறிவுச்சுடரை அது கறைப்படுத்தி அசற்கு இருண்ட நிறத்தையுங்கொடுத்து துர்க்கந்தமான புகையினால் அதை மலினப் படுத்தி விடும். மூளையான கருவி பழுது பட்டிருந்தாலும் அல்லது நன்றாய்ப் பக்குவமாகாமலிருந்தாலும் அது மனசின் ஒளியை மங்கச் செய்து அவ்வொளி வெளியுலகத்தில் கதிர் வீசிப்பிரகாசிப்பதைத் தடுத்துவிடும்.

[இன்னும் வரும்]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

வித்தை VIII.

சென்ற சஞ்சிகையில் பெண்களின் உயர்தரக் கல்வியைப் பற்றிப் பேசுவதாகக் கூறினோம். நம் தேசத்தில் பெண்களைப் பள்ளியினின்றும் சிறு பிராயத்திலேயே நிறுத்திவிடுவார்கள். இதற்கு முக்கிய காரணம் உயர்தர வகுப்புக்களில் தக்க போத

காசிரியர்களில்லாததேயாம். ஜாதியாசாரங்களுக்கு ஒப்பப் போதனை யில்லாததும் மற்றோர்காரணமாகும். ஆகையால் நம் பெண்களுக்கு உயர்தரப் படிப்பு வேண்டுமானால் வீட்டிலேயே தக்க ஏற்பாடு செய்து போதித்தல் நலம். தக்க ஆசிரியர்களைத் தெருத்தெருவாய்ப் போய் போதிக்கும்படி ஏற்பாடு செய்யும் பக்ஷத்தில் பெண்களின் உயர்தரக் கல்வி அபிவிருத்தியாகும் என்பதிற் சிறிதுமையமில்லை. அவ்வாறு போதிக்கும் உத்தம ஆசிரியர்கள் பெண்பாலார்களில் அகப்படுவது அரிதினுமரிதாயிருப்பதால் தற்காலம் அது நடப்பது கஷ்டமாயிருக்கும். ஆகையால் இக்குறைவு நீங்கும் வரை தந்தையும் சகோதரரும் புருஷனுமே அக்கடமை பூண்டு பெண்களின் கல்வியை அபிவிருத்தி பண்ணவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எண்ணல், எழுதல், வாசித்தல் இவற்றைத் தவிர்த்துப் பெண்கள் கற்கவேண்டிய விஷயங்கள் சௌக்கிய நூல், இல்லாண்மை, பாகசாஸ்திரம், குழந்தை வைத்தியம், குடும்ப வைத்தியம், பிரசவ சாஸ்திரம், பக்தி சாஸ்திரம், தையல், படமெழுதல், பாட்டு முதலியன என்று கூறினோம். இவ்விஷயங்களில் பெண்களுக்கு உபயோகமாகும்படியான தக்க புத்தகங்கள் ஏற்படல் வேண்டும். இவ்விஷயமாய்ச் சிற்சில புத்தகங்கள் தற்காலமிருந்தாலும் அவைகளைப்பின்னும் சீர்திருத்திச் சுலபமான விலைக்கு அச்சிட்டுக் கொடுக்கவேண்டும். ஒரு நல்ல புத்தகக் கடையில் போய் பெண்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிந்தெடுக்க முயன்றால் இரண்டொன்றுக்கு மேல் அகப்படுவது அரிது. ஆண்மக்களுக்கு ஆயிரக் கணக்காகப் புத்தகம் நம் சுய பாஷையில் ஏற்பட்டிருந்தால் பெண்களுக்குப் பத்துக்கணக்காகக்கூட இல்லை யென்றே கூறலாம். பெண் பாடசாலைகளில் வெகுமதி கொடுப்போர் இது விஷயத்தில் படும் கஷ்டங்களைச் சொல்லி முடியாது. பெண்கள் கல்வி தற்காலத்தில் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருப்பதாலும் பெண்களுக்குக் கடின நடைகளை வாசித்தறியத் தக்க சாவகாச மின்மையாலும் அவர்களுக்கென்று எளிய நடையில் புத்தகங்கள் எழுதப்படவேண்டுவது முக்கியம். கூடியமட்டும் சௌக்கிய நூல்

ஒருவாறு சுலபமான நடையிலேயே இருப்பதாகச் சொல்லலாம். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இக்குறைவை ஒருவாறு நிவிர்த்தி செய்துவிட்டார்கள். செந்தமிழ்ப் பத்திரிகையில் "சுகசந்தர்சனதீபிகை" என்ற அருமையான சுகாதார நூல் வெளியாகி வருவதை நம் தமிழ் நாட்டார் அறிவர். அந்நூல் ஒவ்வொரு குடும்பத்திலு மிருத்தல் வேண்டும். பல அரிய விஷயங்கள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன வாதலால் அதனை நம்பெண்கள் சுலபமாய் வாசித்து அறிந்துகொள்ளலாம். இல்லாண்மைக்குத் தகுந்த நூல் இன்னும் ஏற்படாதிருப்பது ஒரு பெருங்குறைவே. இஃது ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாத நூல். பிராண்டர் பெருமாட்டி (Mrs. Brander) எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றிருக்கிறது. அது சிறுமிகளுக்குத் தக்க நூல். அதனையும் தற்காலம் உபயோகிப்பது அரிதாகிவிட்டது. இவ்விஷயமாய்ச் சிறிதும் பெரிதுமான நூல்கள் சில ஏற்படல் வேண்டும். பாக சாஸ்திர சம்பந்தமாய்ப் பெருநூலொன்று ஏற்பட்டிருப்பினும் அதிற் கூறப்பட்ட விஷயங்கள் பெரும் தனவான்களுக்கே பெரும்பாலும் பொருத்தமாயிருக்கின்றன. ஆகையால் இவ் விஷயத்திலும் உள்ள குறையை நீக்கல் நலம். குழந்தை வைத்தியத்தைப்பற்றித் தமிழில் தக்க புத்தகங்க ளிருப்பதாகத் தெரியவில்லை. கிறுஸ்துவக் கல்விச்சங்கத்தார் ஆங்கிலேய பாஷையில் இரண்டொரு புத்தகங்கள் அச்சியற்றியிருக்கின்றனர். அவைபோன்ற புத்தகங்கள் நம் தமிழில் நம் தேசாசாரத்துக்கு ஒத்தவண்ணம் எழுதப்படல் வேண்டும். குடும்ப வைத்தியத்துக்கென்று தமிழில் சில புத்தகங்களிருப்பினும் அவை பழைய முறைகளையே பெரும்பாலும் தழுவி நிற்கின்றன. ஆயுர்வேத வைத்தியசாலையார் இவ் விஷயத்தில் சிறிது கவலை செலுத்துவார்களானல் இக் குறைவு கூடியசீக்கிரம் நீங்கிப் பல்லாயிரங் குடும்பங்கள் நோய்க்குட்படாமல் சௌக்கியமாய் வாழ இடமுண்டு. பிரசவசாஸ்திரி விஷயமாய் ஆங்கிலத்தில் பல நூல்களிருக்கின்றன. நம் பெரிய வைத்தியர்கள் இது விஷயமாய்த் தக்கநூல்கள் வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறார்

கள். இது விஷயமாய் நம் பெண்களுக்குத்தக்க அறிவு இருக்கும் பக்ஷத்தில் பிரசவ காலத்தில் அநேக அபாயங்கள் நேரிட இடமிராது. இம்முக்கிய விஷயத்தில் சிறிதும் பெரிதுமான பல நூல்கள் ஏற்படுமானால் சில பெண்கள் இவ்வருமையான விஷயங்களைத் தக்கவண்ணம் கற்றுக்கொண்டு குடும்பங்களுக்கு மிகப்பயன்படுவார்கள். இராஜதானி வைத்திய கலாசாலையிலும் ஜில்லா வைத்திய கலாசாலைகளிலும் பெண்களுக்கு இப்போதனை சுயபாஷையில் தக்க ஸ்திரீ போதனாசாரியர்களால் கற்பிக்கப்பட்டு வருமானால் நம் தேசப்பெண்கள் பலர் இப்பயிற்சியடையப் பின்வாங்கார்கள். கோஷா வைத்திய சாலை ஏற்பாடு பண்ணுகிற புண்ணியவான்கள் ஸ்திரீகளுக்கு இவ்விஷயத்தில் தனிமையான போதனை ஏற்பாடு செய்யும் பக்ஷத்தில் நம் நாட்டுக்குப் பெருத்த நன்மையுண்டாகு மென்பது திண்ணம். தற்காலம் பிளேக் விஷயமாய்ச் சுகாதார முறைகளைச் சொற்ப காலத்தில் கற்பிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்திருப்பதுபோல் இவ்வருமையான விஷயத்தைப் பற்றியும் நம் ஜில்லா போர்டார் தக்க ஏற்பாடு செய்து இரண்டு மூன்று மாதகாலத்தில் இப்பயிற்சி முடியும்படி செய்வார்களானால் பேருபகாரமாயிருக்கும்.

பக்திசாஸ்திரங்களில் பெண்கள் தக்கவண்ணம் பயின்றிருந்தாலல்லது அவர்கள் தம் மக்கட்கு நற்போதனை செய்ய இயலாது. ஆகையால் ஸ்ரீமத் இராமாயணம், மகாபாரதம், பாகவதம், ஸ்காந்தம் முதலிய இதிகாச புராணங்களில் அவர்களுக்கு நல்ல பழக்கமிருந்து வரல் இன்றியமையாதது. இப்புத்தகங்கள் எளிய நடையில் பரிசுத்தமான நிலைமையில் எழுதப்படல் வேண்டும். தற்காலம் இருந்துவரும் புத்தகங்கள் மிகவும் பெரிதாக விருப்பதுமன்றி பரிசுத்தமான நடையில் எழுதப்படவில்லை. வீடுகள் தோறும் ஒவ்வொரு நாளும் புராணங்களின் வாசிப்பு இருத்தல் மிக்க நன்மை பயக்கும்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

என்ற நீதியின்படி செவிச்செல்வமே நம் பெண்களுக்கு மேலான நன்மை புரியும். "கற்றலிற் கேட்டலே நன்று" என்பதையும் காண்க. முற்கால மாதர்கள் இவ்விதச் செவிச் செல்வத்தைப் பூர்ணமாகப் பெற்றிருந்தமையால்தான் நம் நாட்டில் சன்மார்க்கம பரவியிருந்தது. ஆகையால் இவ்வண் ணம் நம் நாட்டில் அறிவைப் பரவச் செய்வதில் நாம் சிறிதும் பின்வாங்கல் கூடாது. முற்காலத்தில் பெண்களின் கல்வி உய ர்ந்த நிலைமையிலிருந்துவந்தது என்பதைப்பற்றி அடுத்த சஞ் சிகையிற் கூறுவாம.

[இன்னும் வரும்.]

பத்திராதிபர்.

20-வது காங்கிரெஸ் மகாசபை.

சென்ற டிசம்பர்மீ 27உ 20-வது காங்கிரெஸ் மகாசபை பம்பாய் நகரில் மிக்க விமரிசையுடன் கூடியது. அச்சமயம் நம் நாட்டுப் பரம மித்திரராகிய ஸர் ஹேன்ரி காட்டன் துரை யவர்கள் அக்கிராசனதிபத்தியத்தை வகித்தார்கள். இதுவரை இவ்விதக் கூட்டம் கூடினதே இல்லையென்று கண்டோர் வியக் கிறாகள். அதற்கென்று ஏற்பட்ட அழகிய பந்தரில் பதின யிரம் ஜனங்கள் கூடியிருந்தனர். சென்ற 19-ம் காங்கிரஸை எவ்விதத்திலும் பழிக்கும்படி யிருந்தது இக் காங்கிரெஸ். அரி யபுத்திமானகிய நம் பெரோஜிஷாமேதா அவர்கள் ஆங்குக் கூடியவர்களை நல்வரவு கூறி யழைத்தனர். அச்சமயம் அவர் களது வாக்குச் சாதுரியம் எவரையும் பிரமிக்கச் செய்தது. ஒரு மணிநேரம் எல்லோரும் மெய்ம்மறந்து அப் பிரசங்க மாரியைச் செவிசாய்த்துக் கேட்டுப் பெருமகிழ் வெய்தினர். அதன் பின்னர் நம் பிரசங்கச் சிங்கமகிய சுரேந்திர நாதர் எழுந்து அக்கிராசனதிபதி யவர்களைப் பிரேரேபித்தனர். அம் மகான் பல்லாயிரம் கரகோஷங்களுக்கு மத்தியில் எழுந்து எவரும் வியக்கும் வண்ணம் பல அரிய பெரிய விஷயங்களைச் சுட்டி மிக

வும் சாதுர்யமாய்ப் பேசினர். அது முடிந்தபின்னர் வழக்கம் போலவே ஸப் கமிட்டி கூடி அடுத்த நாட் செய்யவேண்டிய விஷயங்களை ஆலோசித்தார்கள். அடுத்து இரண்டு தினங்களும் யாதொரு இடையூறுமின்றி விஷயங்கள் மிகவும் விமரிசையாய் நடந்தன. முன்னிலும் அதிக ஊக்கமும் உற்சாகமும் இவ் வருஷம் காட்டப்பட்டன. நம் நாட்டு அந்தரங்க நண்பர்களாகிய ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அவர்களும் மிஸ்டர் சாமியூல் ஸ்மித் அவர்களும் இங்கிலாந்திலிருந்து விஜயஞ் செய்திருந்தார்கள். அடுத்த முறை நம் முக்தி நகராகிய காசியில் இச்சபை கூடும்படி தீர்மானம் செய்திருக்கிறார்கள். இம் மகா சபையை நம் நாட்டார் 20 வருஷ காலங்களாகப் பல பாடுபட்டு ஊட்டி வளர்த்துவந்ததின் பயனை இனியே நாம் அநுபவிக்கப் போகிறோம். இதுவரை மைனா ஸ்தானத்திலிருந்த நம் காங்கிரெஸ் பிள்ளை இப்பொழுது மெஜாரிடிக்குவந்துவிட்டபடியால் இனி நம் நாட்டுக்கு நற்காலம் பிறந்ததாகவே கூறலாம். இனியாவது இதன் துவேஷிகள் இதனை நேசிப்பார்களென்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

பொருட்காட்சி சாலை.

இவ்வருஷம் பொருட்காட்சி சாலையைப்போல் டில்லிமாநகரிலும் நாம் கண்டதில்லை என அக்காட்சி கண்ணுற்றோர் அனைவரும் வியந்து கூறுகிறார்கள். நம் நாட்டுக் கைத்தொழிலின் மேன்மை உலகத்தார் உவக்கும் வண்ணம் நன்கு விளங்கிற்றாம். நம் அரிய சிற்பச் சித்திரங்கள் இன்னும் முற்றிலுமொழிந்து போகவில்லை. இது முதற்கொண்டு நன்கு கவனித்தாலும் இவை தழைத்தோங்கத் தடையில்லை. உழைப்பும் ஊக்கமுமே இதற்கு வேண்டுவது. ஜப்பான் முதலிய அந்நிய நாட்டின் பெருமையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு பெரும் பேச்சுப் பேசுவதிற் பயனென்ன? கருமமே கண்ணாயிருந்து காரியத்தைத் தொடங்கல்வேண்டும். நம் நாட்டுச் சாமான்களில் அதிகப்பற்று ஜனங்களுக்கு ஏற்பட்டாலொழிய நம் கைத்தொழில் அபிவிருத்தியாக இடமில்லை. கைத்தொழி லபிவிருத்

தியடையாவிடின் அயல் நாட்டுச்சரக்குக்கு நாம் தொண்டு பூண்டொழுகும் தன்மையும் நம்மை விட்டகலப்போவதில்லை. பலர் ஒன்று கூடி ஒருவரை யொருவர் நேசித்து மனப்பூர்வமாய் நம்பிப் பொதுஜன க்ஷேமத்தைக் கருதி ஒத்துழைத்தாலன்றி இத்தகைய பெருங்காரியங்களை நாம் நிறைவேற்ற வொண்ணாது. "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" "பொருளில்லை பொருளில்லை" என்று வீணைப் பிதற்றிக்கொண்டிருந்தால் காரியம் கைகூடாது. "பலதுளி பெருவெள்ளம்" என்ற வண்ணம் சொற்பம் சொற்பமாய்ச் சேர்ந்தால் பெருந்தனங்குவியத் தடையிராது. ஒரு விஷயம் நிறைவேறுவதற்குத் தக்க முயற்சியும் தக்க மனிதர்களும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாக மாட்டாது பணம். ஆகையால் முதலிரண்டு குறைவாலேயே அதிகமாய் நம் நாடு முன்னுக்கு வராமலிருக்கிறது. இதுவன்றி ஜாதியாசார விஷயங்களையும் மதவிஷயங்களையும் பற்றிக் குறை கூறி எக்கம் பிடித்துச் சோம்பர்களா யிருப்பதில் பயனில்லை. "முயற்சி திருவினையாக்கும்" என்பதே நம் பிருதாவளியாக வைத்து நடத்தினால் எக்காரியமும் கைகூடும்.

பத்திராதிபர்.

போர்ட் ஆர்தரின் வீழ்ச்சி.

சென்ற சஞ்சிகையில் ருஷிய ஜப்பானிய யுத்தம் என்று முடிவாகிச் சமாதானம் ஏற்படுமோ என்று கூறினோம். நம் கோரிக்கைப்படி சீக்கிரமே யுத்தம் நின்று போனதைக் குறித்து நமக்குண்டாகும் மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை. நாளது ௴ உ௨ இரவு $9\frac{3}{4}$ மணிக்கு போர்ட் ஆர்தருக்குள் அகப்பட்டிருந்த ருஷியர்கள் ஜப்பானிய வீரரிடத்தில் சரணமடைந்தார்கள். பதினொரு நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை. "ருஷிய சேனையும் உத்தியோகஸ்தரும் கைதிகளாக வேண்டும். எல்லாக் கோட்டைகளும் யுத்தத்துக்குரிய சாமான்களும் ஜப்பானியர் வசம் கொடுக்கப்படல் வேண்டும். இவைகளில் எதனையாவது ருஷியர் அழித்துவிட்டால் நிபந்தனைகளை ரத்து செய்து இஷ்டப்படி நடக்க ஜப்பானியருக்குச் சுவாதீனமுண்டு. கோட்டை கொத்தளங்களின் பிளானையும், சுரங்கமிருக்கப்பட்ட இடங்களைக்குறிக்கும் பிளானையும் ருஷியர் ஜப்பானியரிடம் கொடுத்துவிடல் வேண்டும். இவ்வளவுகாலம் தைரியமாய்க் கோட்டையைக் காத்ததையுத்தேசித்துத் தளகர்த்தர்கள் முதலானவர்கள் தங்களுடைய கத்திகளையும் இதர சாமான்களையும் தங்களு

டன் வைத்துக்கொள்ள இடங்கொடுக்கப்படும். மறுபடியும் இந்த யுத்தத்தில் பிரவேசிக்கிறதில்லை யென்று அவர்கள் சத்தியஞ் செய்த பின் அவர்கள் தங்கள் சுயநாடாகிய ருஷியாவுக்குப் போக அநும்தி கொடுக்கப்படுவார்கள்." நாலாந்தேதி ஜப்பானியர் கோட்டைக்குள் புகுந்து அதைப் பிடித்துக்கொண்டார்கள். போர்ட் ஆர்தரிலிருந்து ஜப்பானியருக்குக் கிடைத்தவை 59 கோட்டைகள். 546 பீரங்கிகள். 82670 பீரங்கிக்குண்டுகள். 35252 கைத்துப்பாக்கிகள். 1920 குதிரைகள். 4 போர்க்கப்பல்கள். 2 காவற்கப்பல்கள். பீரங்கிப் படகுகளும் அழிகப்பல்களும் 14. 10 கப்பல்கள். 35 சிறுகப்பல்கள். இதனுடன் இப்பெரும் யுத்தம் முடிந்து விட்டதாக நாம் நினைக்க ஒண்ணாது. இருதிறத்தார்க்கும் சமாதான உடன்படிக்கை ஏற்படு நாள் எந்நாளோ! அறிகிலேம். நாகரீக ஜாதியார் சமாதானமாய் வாழாமல் சண்டையிட்டுப் பல்லுயிர் மாளக் காரணமாகவிருப்பது பரிதாபம்! பரிதாபம்!! பரிதாபம்!!!

பத்திராதிபர்.

புத்தகக்குறிப்பு.

தண்டியலங்காரம் மூலமும் உரையும்:— ஐவகை யிலக்கணங்களுள்ளே அணியிலக்கணங் கூறுவதாய தண்டியலங்காரத்திற்கு யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்துவசிகாமணியாகிய ஸ்ரீமாந் அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் புதுக்கிய உரைப்புஸ்தகத்தைக் கண்ணுற்றேம். இவ்வுரை பழைய வுரையுள் வடநூலுக்கும், யாப்பருங்கல விருத்தி மாறனலங்கார முதலிய தமிழ் நூல்கட்கும் ஒத்தவற்றைத் தழுவியும் மாறுபட்டவற்றைத் திருத்தியும் கற்போர்க்கு எளிதிற் பயன் தரத்தக்க வண்ணம் நன்கு விளக்கப்பெற்றுள்ளது. இது அணியிலக்கணங் கற்கப்புகுவார் யாவர்க்கும் இன்றியமையாப் பெருமையுடைத்து. யாம் முன்னர் மாலைமாற்றுமாலை உரை யெழுதிய காலை அந்நூலிலுள்ள காதைகரப்பு, கரந்துறைறையென்னுஞ் சித்திரகவிகட்குத் தண்டியலங்காரத்தின் பழைய வுரையிற் கண்ட இலக்கணங்கள் மாறுபாடாகவும், யாப்பருங்கல விருத்தியினும், மாறனலங்காரத்தினும் உள்ள இலக்கணங்கள் ஒத்திருப்பவும் கண்டு அவை அச்சுப்பிழையோ அன்றி உரைப்பிழையோ என முற்றும் ஆராய்ந்த இடத்துப் பின்னும் பல மாறுபாடுகள் காணப்பட்டன. அக்கால முதற்கொண்டே வடநூற்புலமையும் தமிழ்ப்புலமையும் ஒருங்கெய்தினர் யாவராயினும் ஒருவர் அப்பழைய வுரையுள் மாறுபாடுற்றவற்றை வடநூலு

டன் ஒப்பு நோக்கித் திருத்தி வெளியிடிற் பேருபகாரமாகுமெனக் கருதியிருந்தோம். அவ்வண்ணமே பிள்ளையவர்கள் நன்காராய்ந்து அணி கூறும் எனைத்தமிழ் நூலுக்கும் வடநூலுக்கும் மாறுபாடின்றிப் பலதிருத்தங்கள் செய்து தன்மை முதலாய அணிகளுக்கு வடமொழிப்பெயரும் உடனெழுதி அவற்றுடன் சருப்பதோபத்திரம் முதலாய அரிய வடசொற்களுக்கும் பதப்பொருளுரைத்து அப்பெயர்க்காரணங்களையும் இனிது விளக்கியிருக்கின்றார்கள்.

இவ்வுரை கொண்டல்லது சருப்பதோபத்திரம், கூடசதுர்த்தம் முதலாகிய சொற்களுக்குத் தமிழொன்றே கற்றார் யாவரும் பொருளறிதல் இயலாது. இன்னும் பலர் பெயர்ப்பொருளும் காரணமும் அறியாமையின் பழையவுரையிற் கண்டவாறு "கூடசதுக்கம்" எனவே கொண்டிருக்கின்றனர். ஆறாரச்சக்கரத்துள் "தண்மலர்வில்லி" என்னும் பாட்டுப் பிழைபடவரைந்திருப்பதன்று; அதுவுமொக்குமெனக்கொண்டாரும் பலருளர்.

அவ்வாறே பல வயிற் போலி முதலாய பல அணிகளுக்குப் பொருந்தாவுரை யெழுதப்பட்டிருந்தன.

பிள்ளையவர்கள் அவற்றை யெல்லாம் திருத்தி யினிது விளக்கியதுமன்றி முரசபந்தம், நாகபந்தம் முதலியவைகளைச் சித்திரக்கோட்டங்களில் அமைத்தும் இறுதியில் உதாரணக் கவிகளுக்கெல்லாம் அருஞ்சொற் பொருளும் அருஞ்சொற்றொடர்ப் பொருள் கோளும் எழுதிச்சேர்த்தும் நல்ல கடிதத்தில் நல்ல எழுத்தில் சுத்தப் பிரதியாக அச்சிட்டிருக்கின்றார்கள். இப்புத்தகம் தமிழ் மணங்கொண்டார் யாவராலும் மிகப்பாராட்டற்பாலதேயாம். "இதனை யிதனால் இவன் முடிக்கு மென்றாய்ந் ததனை யவன்கண் விடல்" என்றாங்கே வடமொழி தென்மொழிப் புலமையிற் சிறந்தாரே செய்தற்குரிய இப்பெருங்காரியத்தை நிறை வேற்றற்கு இப்பிள்ளையவர்களே தக்கவர்களென்றறிந்து வேண்டிக்கொண்ட மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியும் பாலவநத்தம் ஜமீந்தாரும் இருபெருஞ் செல்வப்பிரபு சிகாமணியும் ஆகிய ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைசாமித்தேவரவர்களின் மதிவலிமை மிக வியக்கற்பாலதே.

இப்புத்தக விலை ரூ 1—0—0 தான் என்பது யாவரும் எளிதிற் பெறக்கருதியமைக்கப்பட்டதாகும்.

வைதிக சைவபரிபாலினி:—இஃது யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தினின்று "வைதிக சைவபரிபாலினி" சபையாரால் மாசந்தோறும் வெளியிடப்பெறுவது. சென்ற 904 ஆகஸ்டு மீ வெளிவந்த இதன் முதற் புத்தகத்தைப் பார்த்தேம். இதில் வைதிக சைவபரிபாலன சபையில்

யாழ்ப்பாணம் நல்லூர் வைதிக சைவ உபந்நியாசகரும், சிவபுராணப் பிரசாரகரும், சைவ வைஷ்ணவ கதாப்பிரசங்கியும் ஆகிய பண்டிதர் ஸ்ரீமத் ந. வே. கனகசபாபதி ஐயரவர்கள் செய்ததோர் பிரசங்கச்சுருக்கமும், சுன்னுகம் வித்துவசிகாமணியாகிய ஸ்ரீமாந் அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் செய்த பிரசங்கச்சுருக்கமும், கொழும்பு சிப்முதலியாரும் ஆரிய ஆந்திர ஆங்கில திராவிட வித்துவானும் ஆகிய ஸ்ரீமாந் சி. கைலாசபிள்ளையவர்கள் செய்த பிரசங்கச்சுருக்கமும், இச்சபையின் உபசமாஜங்களைப்பற்றியவும் எழுதப்பெற்றுள்ளன. மேற்குறித்த பிரசங்கங்க ளொவ்வொன்றுள்ளும் பலப்பல அரிய பெரிய விஷயங்களடங்கியுள்ளன. இங்ஙனம் மாசந்தோறும் ஒருபுத்தகம் வெளிவருமாயின்தமிழ் மக்கட்குப் பெரிய அதிர்ஷ்டமேயாம். இப்புத்தகம் வேண்டியவர்கள் முதலிற்காட்டிய கனகசபாபதியையரவர்கட்கு அறிவித்துத் தபால் செலவு மட்டுங் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வித ஏற்பாட்டினுல் இவர்களது நன்னோக்கமும் பரோபகாரமும் தெற்றெனவிளங்குகின்றது. என்றும் நன்று நிலவும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

விபூதி ருத்ராக்ஷதாரண நிரூபணம்:—இது மன்னுர்குடி மகாமகோபாத்தியாய பிரமஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர்அவர்களால் வடமொழியிலியற்றப்பட்ட நூலின் மொழிபெயர்ப்பு. இதனை மொழிபெயர்த்தவர் எட்டயபுரம் வியாகரணவித்துவான் பிரமஸ்ரீ வெங்கடாசலதீக்ஷிதர் அவர்கள். விருதுபட்டி ஸ்ரீலஸ்ரீ வி. சிவஞானயோகிகள் இதற்குக் கருத்துரை யெழுதி சிங்கம்பட்டிஜமீன்தார் அவர்கள் பேருதவியால் அச்சியற்றிய பிரதியொன்று நம்பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்களுக்கு நன்றி பாராட்டுகின்றோம். இதன் முதனூலாசிரியர் பெருமை இந்நாட்டார் எவரும் அறிவார்களாதலால் நூலின் மாண்பைக்குறித்து நாம் யாதும் புகலல் மிகையேயாம். மொழிபெயர்ப்பும் முதநூலுக்கிணகக்மாகவேயிருக்கிறது. ஏறக்குறைய 200, பக்கங்கள் கொண்ட இந்நூலில் பல அருமையான விஷயங்கள் அடங்கியுள்ளதால் சைவாபிமானிகள் அனைவரும் இதனை ஏற்றிப் போற்றிப் பாராட்டுவாராக.

கட்டிடசாஸ்திரம்:—சென்றவருஷம் ஏப்ரல்மீ பாநுவில் 159-ம்பக்கத்தில் மரங்களும் அவைகளின் உபயோகங்களும் என்ற சிறுநூலைப்பற்றி நாம் எழுதியதைப் பலரும் அறிவார்கள். இச்சிறுநூல் அதன் 2-வது பாகம். இதில் கட்டிடத்துக்கின்றியமையாத சுண்ணம்பு சாந்துமுதலிய கட்டிடக் கருவிகள் பேசப்பட்டிருக்கின்றன. இதனை இயற்றியவர் முசிரி மைனர் இரிகேஷன் ஓவர்சியராகிய மகா-ள-ள-ஸ்ரீ அமிர்தலிங்கமையர் அவர்கள். இதனை நம்பார்வைக்கு அனுப்பியதற்காக அவர்களுக்கு நன்றிபாராட்டு

கிறோம். இதிற்கண்ட விஷயங்கள் எவர்க்கும் பயன்படத்தக்கவை. சிற்பசாஸ்திரம் கற்க வாய்க்காத மானுடர்கள் அனைவரும் இந்நூலைவாங்கிப் படித்தல் நலம். இஃது எளிய நடையுடனிருப்பதுமன்றி மிகவும் அழகாகவும் உயர்ந்தகடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. விஷயங்களின் அருமைக்கொப்ப அவை ஏற்பட்டிருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. ஜில்லாபோர்டார்களும், எஞ்சினியர்களும் இப்புத்தகத்தை ஒவ்வொரு மேஸ்திரி கையிலுமிருக்கும்வண்ணம் செய்தல் நாட்டுக்குநலமாம். இந்நூலாசிரியர் இன்னுமிவைபோன்ற அரியமுயற்சியில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைத்துப் புகழ் பெறும்வண்ணம் பகவான் இவருக்குத் தேக சுகத்தையும் புத்தி வன்மையையும் அருள்புரிவாராக. சுமார் 85 பக்கமுள்ள இதன் விலை 4 அணுவே.

"மாதர் மனோரஞ்சனி" இத்தமிழ்ப் பத்திரிகை 6-வது வருஷம் பூர்த்தியுற்றது. ஒவ்வொரு பத்திரிகையையும் யாம் பார்த்து வருகின்றோம். இனிய தமிழ் நடையில் அருமையான விஷயங்களே யெழுதப்படுகின்றன. பத்திரிகை பார்வைக்கு மிகவும் அழகு வாய்ந்துளது. நம் தமிழ் நாட்டார் பலரும் இதனை ஆதரிப்பார்களாயின் மிகப் பேருபகாரமாகும்.

பத்திராதிபர்.

வைத்தியம்.

[முன் தொடர்ச்சி]

சிவகிரித் தைலம்.

வெற்றிலை, ஆதொண்டையிலை. நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி சமூலம், பச்சை மஞ்சள், கஞ்சாவிலை, எட்டிப்பழம், இவற்றின் சாறுகளும் பசுப்பாலும் வகைக்குப் படி (1), நல்லெண்ணெய் படி (2) ஒன்றாய்க் கலந்து இதில் மஞ்சள், கோஷ்டம், மிளகு, கருஞ்சீரகம், நற்சீரகம், முத்தக்காசு, செம்முள்ளிவேர்ப் பட்டை, கற்றாழைக் கிழங்கு, பூஞ்சாந்துப் பட்டை, வகைக்குப் பலம் உ (½) பசுப்பாலா லரைத்துக் கரைத்து மெல்லிய தீயிட்டெரித்து மெழுகு பதத்தில் குங்குமப்பூ பச்சைக் கர்ப்பூரம் வகைக்கு விராகனெடை (½) கஸ்தூரிமஞ்சள் பூலாங்கிழங்கு பச்சிலை வகைக்கு விராகனெடை (1) இவற்றைப்பொடித்துப் பழக்கிய வடிகலசத்துள்ளிட்டு இதில்

வடித்துவைத்துக்கொண்டு வாரம் 2 முறையாக முழுகிவந்தால் தலைவலி, தலையில்தினவு, கண்ணெரிவு, கண்சிவப்பு, பீனசம், காதில்ரீங்காரத்தொனி, உச்சந்தலையிடி, சிரோபார முதலிய கண்டத்தின்மேலுள்ள எல்லா அவய வங்களிலுமுள்ள எண்ணிறந்த ரோகங்கள் குணமாகும்.

பத்தியம்:— முழுக்கன்று தயிர், மோர், பகல் நித்திரை, தித்திப்பு வஸ்துக்கள், மாதர்முயக்கம், புளி, புகையிலை, முதலியவற்றை நீக்கிவிட வேண்டியது.

எந்த ரோகத்தை யகற்ற உத்தேசித்து இது முழுகி வரப்படுகிற தோ அந்த ரோகங் குணமான பின்னும் 5, 6, முழுக்கு முழுகிப் பின்னர் நிறுத்தவேண்டியது.

கர்னரோகங்கட்குச் சிகைக்காயும் பச்சைப்பயறும், நேத்திர ரோகங் கட்குச் சிகைக்காய் வெந்தயம் பச்சைப்பயறும், சிரோ ரோகங்கட்குச் சிகைக்காய் மாத்திரமும் உபயோகிக்க வேண்டியது. இது ஒவ்வொரு தைலத்திற்கே ஏற்றது.

கல்லடைப்பு.

இவ்வியாதி தோன்றுதற்கு எவ்வளவோ காரணங்களுண்டு. சுருக் கிச்சொல்லுமிடத்து, இந்திரியஸ்கலிதமே யில்லாதோர்க்கும், மிதமிஞ்சிய இந்திரிய ஸ்கலிதத்தைத் தேடிக்கொண்டோர்க்கும், பிரமேக ரோக மேற் பட்டபோது தக்க சிகிச்சையின்றி அக்கிரம சிகிச்சை செய்து கொண் டோர்க்கும், பிரமேகதாபிதத்தால் ஆண்குறிச்சளிச் சவ்வு சுபாவ நிலைமை க்கு மாறுபட்டோர்க்கும், சொற்ப நீரடைப்பிற்காகச் சலாகையைப் பிர யோகித்தோர்க்கும் இவ்வடைப்பு ஏற்படுவது வழக்க மாயிருக்கிறது. ஆர ம்ப அடைப்பின் போது சாப்பிட்டாற் குணமடைதற் கேற்றபரிகாரம் இது.

முற்றிய குளத்து வெள்ளரி விதை ரூபாயெடை 2, பொரித்த வெண் காரம் விராகனெடை $\frac{1}{2}$ நற்சீரகம் விராகனெடை $\frac{1}{4}$ இவற்றைச் செவ்விள நீரிலரைத்து அந்தச் சலத்திலேயே கலந்து சாப்பிடவேண்டியது. நீர் தாராளமாய் இறங்கும் வரையும் 2, 3 வேளை சாப்பிடலாம். நீர் சுபாவ நிலைமைக்கு வந்தவுடன் மருந்தை நிறுத்திவிடவேண்டியது.

[இன்னும் வரும்]

வீ. சா. ஐயன்பிள்ளை,
இந்துவைத்தியர், காட்டம்பட்டி, நெகமம் போஸ்டு,
பொள்ளாச்சிதாலூகா.

சைவ பரிபாஷை.

இது

திருக்கயிலாய பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனத்துப் பிரதம குருமூர்த்திகளும் அதிவருணாச்சிரமாசாரியவரிய சைவ பரிபாலகருமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிரயோகிகளால் வட மொழியிலிருந்து மொழிபெயர்த்தருளிச் செய்யப்பெற்றது.

நூல்.

இவ்விடத்துத் தருமம், அருத்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களுக்குள் மோக்ஷமானது பரம புருஷார்த்தமாதலால் தீக்ஷை முதலானவையால் பாசம் போன பின்பு பசுவினிடத்தில் சிவத்துவம் (1) அபிவியக்தமாவதேயாகிய அந்த மோக்ஷமும், பதியைவிட வேறன்றியுண்டாகும் (2) சாக்ஷாத்காரத்தினாலேயே அடையத்தக்கதாதலால்.

அந்த சாக்ஷாத்காரமும் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பதார்த்தங்களின் (3) பரிஞ்ஞானத்தினாலே கிடைக்குமாதலால் அந்தப்பரிஞ்ஞானமும் அளவைக்கு (4) ஆதீனமாதலால் முதலில் உத்தேசம், லக்ஷணம், பரிக்ஷை என்னும் மூன்று காரியங்களோடு பிரமாணமென்னும் அளவை நிரூபிக்கப்படுகின்றது.

அவற்றுள் பதார்த்தங்களினது சுவரூபத்தை மாத்திரஞ் சொல்லுவது உத்தேசம். அதற்குமாத்திரமுரியதரும்ம் லக்ஷணம். இலக்கியத்திற்கு இலக்கணம் சரியோ அன்றோ என்று விசாரிப்பது பரிக்ஷையாகும்.

(1) அபிவியக்தம்—வெளிப்படுதல்.
(2) சாக்ஷாத்காரம்—பிரத்தியக்ஷித்தல்.
(3) பரிஞானம்—விசேஷஞானம்.
(4) ஆதீனம்—உட்பட்டது.

அவற்றுள் பிரமாணங்களுக்கு உத்தேசமாவது. பிரத்தியக்ஷம, அனுமானம், சப்தம் என்பது.

அந்தப்பிரமாணங்களுக்குப் பொதுவிலக்கணமாவது சம்சயம், விபரியயம், ஸ்மிருதி, இம்மூன்றிற்கும் வேறாய பிரமை என்னும் வேறுபெயருள்ள ஆதம சிற்சத்தியேயாகும்.

அப்படி சம்சயமுதலானவைநீங்கிய சிற்சத்தியானது பிரமாணமாய்ச் சொல்லப்படுகின்றதென்று பௌஷ்கராகமத்திற் சொல்லியிருக்கிறது.

அவற்றுள் சம்சயமானது:—பொதுவான தருமத்தைக் கண்டு இரண்டுதன்மையை யனுசரித்துண்டாகும் ஞானமாகும்.

அஃது எங்ஙனமெனின் இது கட்டையோ கள்ளனோ என்பனமுதலானவையாகும்.

விபரியயமாவது:—அஃதல்லாததை அஃதாக அறிவது. எப்படியெனின் முத்துச்சிப்பியில் வெள்ளியென்னும் புத்தி முதலானவையாகும்.

முன்னனுபவத்தாலுண்டாகிய (1) சம்ஸ்காரத்தினாலுண்டான புத்தி ஸ்மிருதியாகும். எப்படியெனின் காமுகனுக்கு (2) காமினி சாக்ஷாத்காரமுதலானவையாம்.

இம்மூன்றற்கும் வேறான சிற்சத்தியே பிரமாணமாகும். அப்படியே பௌஷ்காரகமத்தில் சம்சயாதி சுவரூபமும், சிற்சத்தியே பிரமாணமென்பதுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச்சிற்சத்தியும் பதார்த்தங்களை (3) விஷயீகரித்துவரும் போதமேயாகும். அந்தச்சிற்சத்திக்குப் பிரயோசனம் தன் விஷயத்

---

(1) சம்ஸ்காரம்—வாசனை.

(2) காமினி—பெண்.

(3) விஷயீகரித்தல்—அனுபவமாயறிதல்.

தில் தள்ளவேண்டியதைத்தள்ளிக் கிரஹிக்கவேண்டியதைக் கிரஹிப்பதுமுதலானவையாகும். அப்படியே ஆகமவசனமிருக்கின்றது. இதில் (1) அதிவியாப்திமுதலான தோஷங்களில்லையென்று அந்த ஆகமத்திலேயே சொல்லியிருக்கின்றது.

எப்படியெனில் வசனார்த்தம்:—இதில் அதிவியாப்தி முதலான தோஷங்கள் ஒருபொழுதும் உண்டாகமாட்டா. பிரத்தியக்ஷமுதலான பிரமாணங்களில் வியாபித்திருக்கையால் (2) அபிவியாப்திதோஷமில்லை. பலவிதமான (3) பிரமேயங்கள் இலக்கணமாயிராமையால் அதிவியாப்திதோஷமில்லை. இலக்கியத்திலிருப்பதால் (4) அசம்பவம் என்னும் தோஷமில்லை. இப்படியிருந்தால்தான் பிரமாணமாகுமென்பது ஆகமவசனம்.

ததாகதர் என்னும் பௌத்தர்கள் அவிசமவாதிஞானமே பிரமாணமென்றும், அருத்தமும் செய்கையுமிருப்பது அவிசமவாதமென்றுஞ்சொல்லுகிறார்கள்.

அதுகூடாது. இறந்ததையும், வரப்போகிறதையும் குறித்துவரும் அநுமானங்களில் அதிவியாப்திதோஷம் வருவதால் என்க. இறந்ததும் வரப்போகிறதும் தற்காலத்திலின்மையால் அவ்விடத்துப்பொருளுஞ் செய்கையும் எப்படியிருக்கும்?. பின்னும் ஸ்மிருதிஞானத்திலும் சவிகற்பஞானததிலும் அதிவியாப்திவருவதாலும், அந்தஸ்மிருதி சவிகற்பங்களில் பிரவிர்த்தித்தவனுக்கு (5) விஷமவாதமில்லையல்லவா?

---

(1) அதிவியாப்தி—ஒருபொருளுக்கு உரியதென்ற இலக்கணம் வேறு பொருளிலும் இருத்தல் "மாட்டுக்குக்கொம்புண்டு" என்பது போல்வது.

(2) அபிவியாப்தி—உட்படுதல்.

(3) பிரமேயம்—அளவிடப்படுவது, அறியப்படுவது.

(4) அசம்பவம்—ஒருசாதிக்குச்சொல்லுமிலக்கணம் அச்சாதிப்பொருளொன்றிலுமில்லாதிருத்தல்.

(5) விஷமவாதம்—துர்வாதம்.

பிரபாகரர்கள் அநுபவமேபிரமாணம். அந்த அநுபவம் ஸ்மிருதிக்கு வேறுனது. ஸ்மிருதியாவது முன்னநுபவத்தாலுண்டான சமஸ்காரத்திஞலேயுண்டாகும் ஞானமாகுமென்கிறார்கள்.

அதுவும் கூடாது. அவ்விடத்து முன்னம் பதார்த்தஸ்மிருதியை முன்னிட்டுவந்த வேதத்தின் வாக்கியார்த்தஞானத்தை, சுவயமாகப்பிரமாணமென்று சாதிக்கிறது. இப்போது ஸ்மிருதி நீங்கலாக அநுபவத்தைப்பிரமாணமாகச்சொன்னல் முன்பின் விரோதிக்கிறபடியால் பின்னும் ஸ்மிருதிஞானங்களுக்குத் தன்னம்ஸத்தில் சம்மதமான (1)பிராமாணியம் ஏற்படமாட்டாது. ஸ்மிருதியெல்லாம் சுருதிக்கு வேறுகாதானபடியால் அநுபவமாகாதாகையால் என்க.

பாட்டர்கள் அறியப்படாததாயும் உண்மையாயுமிருக்கும் அர்த்தத்தை நிச்சயிப்பதே பிரமாணமென்கிறார்கள்.

அதுவுமழகன்று. (2)திடிலென்று மாறுகின்ற சுபாவமுள்ள துஷமான இந்திரியங்களும், நீர்ப்புகை விஷயமான (3)லிங்கம் (4)பிராந்திகளும், (5) பிராந்தன் வஞ்சகன் இவர்களின் சொற்களும் அறியப்படாத அர்த்தத்தை நிச்சயிப்பதால் பிரமாணமாகவேண்டி வரும். பின்னும் சகல வேதங்களும் பிரமாணமாகாமல் போகவேண்டி வரும். எது போல்வது ஒரு ஜன்மத்தில் வேதார்த்தம் அறியப்பட்டிருக்கு மாதலால், பின்னும் இந்தப் பக்ஷத்தில் (6) பிரவாக ரூபமாய் வரும். இரண்டாவது முதலான ஞானங்கள் பிரமாண மாகாமல் போகவேண்டி வரும். [இன்னும் வரும்.]

---

(1) பிராமாணியம்—எடுத்துக்கொள்ளத்தக்கது.
(2) திடிலென்று—திடீரென்று.
(3) லிங்கம்—குறி.
(4) பிராந்தி—மயக்கம்.
(5) பிராந்தன்—மயக்கமுள்ளவன்.
(6) பிரவாகரூபம்—இடையீடின்றி யொழுகுதல்.



THE GREAT WALL OF CHINA.
சீனாவின் பெரிய மதில்.